DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

உதயம் 1547 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 28, 2025

# "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழனின் 1000வது ஆண்டுக் கொண்டாட்டம் கம்போடியா அங்கோர்வாட் நகரில் 22ம் 23ம் திகதிகளில் நடைபெற்றது.

**(கம்போடியா தேசத்தின் அங்கோர்வாட் நகரிலிருந்து லோகன் லோகேந்திரலிங்கம்)**

அங்கோர் தமிழ்ச் சங்கம் மற்றும் சீனு ஞானம் ட்ராவல்ஸ் நிறுவனம் மற்றும் சவுத் ஈஸ்ட் ஆசியா பல்கலைக் கழகம் ஆகிவற்றின் இணைந்த ஏற்பாட்டிலும் சிந்தனையிலும் திட்டமிடப்பெற்ற "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் பெருவீரனின் 1000வது வெற்றிக் கொண்டாட்டம் கம்போடியா தேசத்தின் அங்கோர்வாட் நகரில் 22-11-2025 அன்று திகதி சனிக்கிழமை காலை கோலாகலமாக ஆரம்பமாகியது உலகின் பல பாகங்களிலிருந்தும் பலர் கலந்து கொண்டனர். (தொடர்ச்சி 15ம் பக்கம்)



# யாழ்ப்பாணம் "யாழ்க்கோ" விற்கு உலக வங்கி வழங்கிய 54 மில்லியன் ரூபா திருப்பிச் செல்லும் அவலதிற்கு யார் பொறுப்புக் கூறுவது?



யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள யாழ்க்கோ நிறுவனத்திற்கு உலக வங்கி மானியமாக வழங்க முன்வந்த 54 மில்லியன் ரூபாவிற்கான திட்டத்தை நிறைவேற்ற முடியாது எனக்கூறி யாழ்கோ நிறுவனத்தின் தற்போதைய தலைவர் உள்ளிட்ட நிறுவனத்தினர் தெரிவித்ததால் பணம் திரும்பும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற உயர் மட்டக் கலந்துரையாடலில் "யாழ்க்கோ" தலைவர் காந்தகுமார் இதனைத் தெரிவித்தார். (தொடர்ச்சி 18ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# உயிர்த்த ஞாயிறு எப்படி திட்டமிட்டார்களோ அதேபோல் புத்தர் சிலை விவகாரம் மாற்று கட்சிகளின் திட்டம்!

## தேசிய மக்கள் சக்தியின் மட்டு மாநகர சபை உறுப்பினர்-யோன்சன்-தெரிவிப்பு



கடந்த காலத்தில் புத்தர் சிலையை வைக்கும் போது திருகோணமலையின் நகர சபை ஆட்சி செய்த தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்ததா? இல்லை இப்போது ஆட்சி செய்வது அதே தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்த்தா? இல்லை எனவே இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் எவ்வாறு திட்டமிட்டு செய்தார்களே அவ்வாறு மாற்று கட்சிகள் திட்டமிட்டு இன துவேசத்தை ஏற்படுத்த போட்ட திட்டம் என தேசிய மக்கள் சக்தியின் மட்டு மாநகர சபை உறுப்பினரும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளருமான யோன்சன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் 5 வது அமர்வு 20ம் திகதி அன்று வியாழக்கிழமை (20-11-2025) காலை 9.30 மணிக்கு சபா மண்டபத்தில் மாநகர சபை முதல் சிவம் பாக்கியநாதன் தலைமையில் இடம்பெற்ற போது அவர் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

இன துவேசத்தை தூண்டுகின்றனர் அது தான் உண்மை இது மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் அரச காணியை புத்த மகாசபைக்கு கொடுத்தனர் அன்று தொடக்கம் புத்தர் சிலை இருந்தது இன்று நேற்று அல்ல அப்போது திருகோணமலையின் நகரசபையை ஆட்சி செய்தது தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்றும் தமிழரசு கட்சி தான் ஆட்சி செய்கிறது.

அன்று மஹிந்த ராஜபக்ஷ அரச காணியை வழங்கிய புத்தர் சிலை வைக்கும் போது தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை? இப்போதும் நகராட்சி சபையை ஆட்சி செய்வது தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்தா இல்லை?

அதாவது திட்டமிட்டு எப்படி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் செய்தார்களே இவ்வாறு திட்டமிட்டு நாங்கள் கொண்டு போய் இரவோடு இரவாக புத்தர் சிலையை வைப்போம் பின்னர் அதை எடுத்து கொண்டு வாங்க அதனை தமிழர்கள் கொண்டு சென்று விட்டார்கள் என ஒரு இனத் துவேசத்தை ஏற்படுத்த மாற்று கட்சிகள் போட்ட திட்டம் தான் இது என்பது அடிப்படையான உண்மை.

தேசிய மக்கள் சக்தி இதை உணர்ந்து ஒரு மாற்றத்தை எடுத்து அதை திரும்பவும் அங்கு வைத்தோம் எனவே இதை நன்றாக சிந்திக்கவும் இனவாதம் இல்லாத ஒரு கட்சி தேசிய மக்கள் சக்தி.

76 வருடங்களாக பண்டாரநாயக்கா டட்லி சேனாநாயக்க இன துவேசத்தை பேசி வந்த இவர்கள் மாறி மாறி இந்த இன துவேசத்தை செய்தனர் இதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நாங்கள் ஒற்றுமையாக பயணத்தை மேற்கொள்வோம் என்றார்.

# மட்டக்களப்பில் அடை மழையினால் பல பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிப்பு — 210 பேர் உறவினர் வீடுகளில் தஞ்சம்--26 வீடுகள் சேதம்



சீரற்ற கால நிலையை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அடை மழை தொடர்ந்து பெய்து வருகிறது இதனால் தாழ் நிலப்பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதுடன் 8 பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 62 குடும்பங்களைச் சேர்ந்த 210 பேர் வீட்டை வெட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளதுடன் 26 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக மாவட்ட அனர்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்த மழை சீரற்ற காலநிலையால் தொடர்ந்து பெய்து வருகிறது இந்நிலையில் மாவட்டதிலுள்ள குளங்கள் நிரம்பி வருகின்றதுடன் தாழ் நிலப் பிரதேசங்கள் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதுடன் காற்றினால் பல பிரதேசங்களில் வீதிக்கு குறுக்கே மரங்கள் முறிந்து வீந்தன இவற்றை அந்தந்த பிரதேச பிரதேச சபையினர் வெட்டி அகற்றி வருகின்றனர்.

இதேவேளை இந்த அடைமழை அடுத்து கிரான் தாம்போதிக்கு மேலால் வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதால் கிரானுக்கும் புலிபாய்ந்தகல்லுக்கும் இடையே உள்ள போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மட்டக்களப்ப்பு வவுணதீவு வலையிறவு பாலம் மற்றும் மட்டக்களப்பு சுமைதாங்கி தாம்போதிகளின் மேலால் வெள்ள நீர் பாய்ந் தோடுவதால் மட்டக்களப்பு நகருக்கம் வவுணதீவுக்கும் இடையேயும் புதூருக்கும் மட்டக்களப்பு நகருக்கம் இடையிலான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெல்லாவெளி தாம்போதியினால் வெள்ளநீர் பாய்ந்தோடுவதால் வெல்லாவெளிக்கும் மண்டூருக்கும் இடையிலான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது மட்டக்களப்பு திருப்பெருந்துறை பிரதேசம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதையடுத்து அந்த பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அடை மழையால் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்வதை தவிர்த்து உள்ளதுடன் வீதி போக்குவரத்துக்கள் குறைவடைந்துள்ளது டன் மக்களின் இயல்பு வாழ்க்கை செயலிழந்துள்ளதுடன் தொடர்ந்து காற்றுடன் அடை மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party - Birthdays
- Graduation Party
- Bridal Shower - Engagement - Wedding Showers

SHIVA SUBRAMANIAM (647) 406-4868



Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# வியந்துநிற்கும் வரலாற்றையும் கலங்கி நிற்கும் இதயங்களையும் எமக்காய் விட்டுச் சென்ற மாவீரத் தெய்வங்கள்!

உலகம் வியந்து நிற்கும் வீர வரலாற்றையும் உலகத் தமிழ் மக்கள் கலங்கி நிற்கும் இதயங்களோடு வருடா வருடம் வணங்கும் வகையான பண்பாட்டு நெறியையும் படைத்து விட்டுபோன எமது மாவீரத் தெய்வங்களுக்காய் மரியாதை செய்யும் அந்த மாதத்தில் நாம் புகுந்துள்ளோம். ஒவ்வொரு வருடத்தின் காரத்திகை மாதமும் உலகத்தமிழர்கள் அனைவருக்கும் ஒரு மரியாதைக்குரிய மாதமாக மாறிவிட்டது. எந்த வருடத்தில் எமது தேசியத் தலைவர் தமது மாவீரர் நாள் உரையை ஆற்றத் தொடங்கினாரோ அன்றிலிருந்து நம் மக்களும் உணர்வாளர்களும் உறக்கத்தை மறந்து உருக்கத்தோ எழுந்து தமக்காய் உயிர்த்தியாகம் செய்த வீர மறவர்களுக்காக கண்ணீர் சொரிந்து கைகளில் வெளிச்சம் ஏந்தி நிற்கும் பண்பாட்டு கோலத்தை வரைந்தவர்களாகிவிட்டோம் என்றால் அது மிகையாகாது.

தமிழர் வரலாற்றில் மாத்திரமல்ல உலகின் எந்த மூலையிலும் இன ரீதியா-கவோ அன்றி மொழி ரீதியாகவோ அடக்கப்பட்டும் ஓடுக்கப்பட்டும் வாழும் தேசிய இனங்களின் கண்களைத் திறக்கச் செய்த தெய்வீக ஒளிவீசும் மாதந்தான் கார்த்திகை என்னும் வணக்கத்திற்குரிய மாதமாக உலக நாட்காட்டியில் அழுத்தமாகப் பதியப்பெற்ற ஒன்றாக மாறியிருக்கின்றது என்பதையும் நாம் உணரவேண்டும்.

உலக விடுதலை நோக்கிய பயணத்தை மேற்கொள்வதற்காக தனித்தமிழர் மரபு வழி இராணுவத்தை தரை, கடல் என கடந்து வான் படையை நிறுவி பற்றுறுதியோடு தமிழர் நாமென்ற தலை நிமிர்வுடன் தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தமிழீழ மக்களின் அடையாளமாகவும், தமிழர்களைத் தனிப் பெரும் சக்தியாக உலகிற்கு அடையாளப்படுத்திய அமைப்பாகவும் விளங்கிய தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் கொண்ட கொள்கையில் இறுக்கமான பற்றுறுதி கொண்டவர்களாய் தமிழீழ தேசத்தையும் அதன் விடுதலையையும் அதிகம் நேசித்தவர்கள்.

"சத்திய யுத்தம் நடக்கிறது! சாவிலும் நிம்மதி தெரிகின்றது!
எத்தனை யுகங்கள் கடந்தாலும் ஈழத்தைஅடைவது நிச்சயமே!
என்றும்
"முப்படை கொண்ட முழு நாடாம் முடிந்தால் எதிரி நுழையட்டும்"
என்ற வீரக் காவியத்தை எழுதிவைத்து விட்டுப் போன மாவீரர்களின் வீரத்தையும் சுதந்திர வேட்கையையும் எழுத்தில் வடிக்க எத்தனையோ இலக்கியவாதிகள் கைகளில் எழுது கருவி எடுத்து வேட்கையோடு காத்திருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு செயல் உருவம் கொடுத்தவர்கள், தமிழ்த் தேசிய இனத்தின் இறையாண்மையை பிரயோகிக்கவும் களமாடி, தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திர வேள்விக்கு தம் உயிர்களை வித்தாகி விருட்சமாய் மிளிர்பவர்கள் மாவீரர்கள்.
""எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால்எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல, இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமதுபோராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாகஅமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள்.சுதந்திரச்சிற்பிகள் எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீர மறவர்கள் எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக தமது இன்னுயிரை ஈர்ந்துள்ள இந்தமகத்தான தற்கொடையாளர்கள் (தியாகிகள்) காலம் காலமாக எமதுஇதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒருசாதாரண மனிதப் பிறவி அல்ல அவன் ஓர் இலட்சியவாதி ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக, விமோசனத்திற்காக வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே, விடுதலை வீரர்கள் அபூர்வமானமனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்" என்றார் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்..

உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைத்த விடுதலைப்புலிகளினால் 2008 ஆம் ஆண்டு இறுதியாக அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நாளில் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய உரையில் ""எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவுக்காக தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில் காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும்வரை தொடர்ந்து போராடுவோம். தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வாழ்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களை பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன்" என்றார்.

எனவே ""எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவுக்காக தொடர்ந்து போராடுவோம்""என்ற உறுதியுரையை தன்மானத் தமிழர்களாக எடுப்போம். தமிழர்களாய் ஒன்றிணைவோம் ,தலைவர் வழி நடப்போம் .தமிழ் தேசம் பாதுகாப்போம். என்ற வாசகங்களை நாம் மனதில் நிறுத்தி மனச்சாட்சியோடு மாவீரர்களை வணங்குவோம் என உறுதியெடுப்போம்!



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
Ward 24 Scarborough-Guildwood
@cllrainslie
www.paulainslie.com
@Ainslie_Ward24
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

## Room for rent in Scarborough

**Room for rent in Scarborough .**
**1 B/R. 1 Bath. Central heating furnished.**

**Contact 647 648 8822**

## மிசிசாகா இலங்கை உணவகத்திற்கு சமையல்காரர் தேவை

மிசிசாகா நகரில் இயங்கிவரும் புகழ்பெற்ற உணவகத்திற்கு உடனடியாக அனுபவம் உள்ள சமையல்காரர் தேவை. இலங்கை இந்திய உணவுகள் மற்றும் கறிகள் தயாரிக்கும் அனுபவம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:- ராஜன் 416 457 8609

# யாழ்ப்பாணப் பழைய பூங்காவில் புதிதாக முளைக்கும் உள்ளக விளையாட்டு அரங்கு!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



## பூங்காவின் உயிரை ஒரேயடியாகப் பறிக்கும் மூடத்தனமான செயல் என பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை!

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணப் பழைய பூங்காவில் புதிதாக முளைக்கும் உள்ளக விளையாட்டு அரங்கு பூங்காவின் உயிரை ஒரேயடியாகப் பறிக்கும் மூடத்தனமான செயல் - பொ. ஐங்கரநேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தொன்மை வாய்ந்த யாழ்ப்பாணப் பழைய பூங்காவில் புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைப்பதற்கான பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. யாழ். நகரில் அமைந்துள்ள பல நூறாண்டுகள் ஆயுளையும் தாண்டிய மரங்களைக்கொண்ட ஒரேயொரு பூங்காவாக விளங்கிய பழைய பூங்கா ஏற்கனவே, தொலைநோக்குச் சிந்தனையின்றி அமைக்கப்பட்ட கட்டிடங்களால் குற்றுயிரும் குலையுயிருமாகச் சிதைந்து போயுள்ளது. இந்நிலையில், தற்போது புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பது பழைய பூங்காவின் உயிரை ஒரேயடியாகப் பறிக்கும் ஓர் மூடத்தனமான செயல் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

பழைய பூங்காவில் புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பதற்கான அத்திவாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இதுதொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், யாழ்ப்பாணப் பழைய பூங்கா யாழ்ப்பாணத்தின் ஓர் தொன்மைவாய்ந்த அடையாளம் மாத்திரம் அல்ல, வாகன நெரிசல் மிக்க யாழ். நகரின் கரிக்காற்றை உறிஞ்சிச் சுத்தம் செய்யும் ஓர் பிரம்மாண்டமான காபன் வடிகட்டியாகவும் செயற்பட்டு வந்துள்ளது. ஆனால், தொலைநோக்கற்ற, நீடித்து நிலைக்கும் பண்பற்ற அபிவிருத்தித் திட்டங்களால் தற்போது பழைய பூங்கா கட்டிடக் காடாக மாறியுள்ளது. ஆளுநர் செயலகம், நில அளவைத் திணைக்களம், நீர்வழங்கல் வடிகால் சபை, தேர்தல் திணைக்களம், கூடைப்பந்தாட்டச் சம்மேளனம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் ஆகியனவற்றின் ஆக்கிரமிப்பில் பூங்கா ஏற்கனவே மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறது.

ஆங்கிலேயர் காலத்தில் மீளப்பெற முடியாத அழியா நன்கொடையாக வழங்கப்பட்ட 9.67 ஹெக்டயர் நிலப்பரப்பைக் கொண்ட பழைய பூங்காவில் தற்போது எஞ்சியுள்ளது 5.19 ஹெக்டயர் நிலப்பரப்பு மட்டுமே ஆகும். மீதமாகவுள்ள இப்பகுதியில் கூடைப்பந்தாட்ட மைதானம், வலைப்பந்தாட்ட மைதானம் மற்றும் வாகனத்தரிப்பிடத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் ஆகியனவற்றை உள்ளடக்கி 12 பரப்பளவில் உள்ளக விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது. இது இயங்கத் தொடங்கும்போது பார்வையாளர்களின் வருகையின் பொருட்டு சூழ உள்ள பகுதியும் அபகரிக்கப்படும் அபாயமே உள்ளது. இந்த அழிப்பை அங்கே அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவால் ஒருபோதும் சமம் செய்யமுடியாது.

பழைய பூங்காவில் விடுதலைப்புலிகளின் காவல் துறை நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் அவர்களால் பூங்காவின் மரங்கள் அழிக்கப்படவில்லை. நிரந்தரக் கட்டுமானப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. வடக்கின் தற்போதைய ஆளுநர் நா. வேதநாயகன் யாழ். மாவட்டச் செயலராகப் பதவி வகித்தபோது புதிய கட்டுமானப் பணிகள் எதனையும் பழைய பூங்காவில் அனுமதிப்பதில்லை என்ற தீர்க்கமான முடிவை எடுத்திருந்தார். இப்போது, அவர் ஆளுநராகப் பதவி வகிக்கும்போது புதிது புதிதாகக் கட்டிடங்கள் முளைக்க ஆரம்பித்துள்ளன. ஆளுநர் உடனடியாக இதனைத் தடுத்து நிறுத்தி, உள்ளக விளையாட்டு அரங்குக்கு மாற்று நிலத்தை ஏற்பாடுசெய்ய முன்வரவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.





# மண்ணுக்காக தமை ஈர்ந்தவர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு மானிப்பாயில் இடம்பெற்றது!

மண்ணுக்காக தமை ஈர்ந்தவர்களை நினைவேந்தும் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் வழமை போன்று இவ்வருடமும் பெற்றோர் உரித்துடையவர் மதிப்பளிக்கும் நிகழ்வு மானிப்பாயில் ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெற்றது.

25ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு திருவள்ளுவர் சன சமூக நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பெற்றோர் உரித்துடையவர் மதிப்பளிக்கப்பட்டனர்.

பிரதேச சபை உறுப்பினர் கலொக் கணநாதன் உஷாந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சபையின் தவிசாளர் ஜெசீதன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், பிரதேச சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக ஊர்வலமாக பெற்றோர் உரித்துடையவர் அழைத்து வரப்பட்டதை தொடர்ந்து பொது சுடரை இரண்டு வீரர்களை மண்ணுக்கு உவந்தழித்த சற்குணராசா தேவமனோகரி அம்மா ஏற்றி வைத்தார்.

ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டதை தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

உரைகள் இடம்பெற்று பெற்றோர் உரித்துடையவர் மரக்கன்றுகள் உலர்உணவுபொருட்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.



# சாவகச்சேரியில் தனது காதலனின் வீட்டில் நகைகளை திருடிய காதலி

காதலனின் வீட்டில் உள்ள நகைகளை காதலி திருடிய சம்பவம் சாவகச்சேரியில் இடம் பெற்றுள்ளது!

சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பழைய பொலிஸ் நிலைய வீதியில் உள்ள காதலனின் வீட்டில் நகை திருடிய குற்றச்சாட்டில் கிளிநொச்சியை சேர்ந்த யுவதி ஒருவர் சாவகச்சேரி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில், சாவகச்சேரியை சேர்ந்த இளைஞரும் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த யுவதியும் காதலித்து வந்த நிலையில் இருவருக்கும் திருமணத்திற்கான நாள் நிச்சயிக்கப் பட்டிருந்தது. இந்நிலையில் காதலி அண்மைய நாட்களாக காதலனின் வீட்டில் தங்கியுள்ளார்.

அந்தவகையில் கடந்த 5 ஆம் திகதி காதலனின் வீட்டில் காதலனின் தாய் வைத்த தாலிக்கொடி உட்பட்ட 8 பவுண் தங்க நகைகள் காணாமல் போயுள்ளதாக 17 திகதி காதலனின் தாயாரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதை பொருள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். அந்தவகையில் கிளிநொச்சியில் இருந்து வந்து காதலன் வீட்டில் தங்கியிருந்த காதலி சாவகச்சேரியில் உள்ள காதலன் வீட்டில் வைத்து அன்று இரவு கைதுசெய்யப்பட்டுளார்.



அவரிடம் மேற்கொண்ட விசாரணையில் தாலிக்கொடியினை சாவகச்சேரியில் உள்ள தனியார் நிதி நிறுவனத்தில் அடகு வைத்ததாகவும், மீதி நகைகளை யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த காதலி, ரிக்ரொக் சமூக வலைத்தளத்தில் உள்ள நண்பர் ஒருவரின் உதவியுடன் இணைய முதலீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும், இதுவரையில் 27 இலட்சம் ரூபா செலுத்தியுள்ளதாகவும், மேலதிக பணம் செலுத்துவதற்காக காதலன் வீட்டில் திருடியதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதே போன்று அண்மைய நாட்களில் வேறு சில சம்பவங்களும் பதிவாகியுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். குறிப்பாக இளம் யுவதி ஒருவர் தனது நகையை விற்பனை செய்து இணைய முதலீட்டு வியாபாரத்தில் ஈடுபட்டதுடன் நகை திருட்டு போயுள்ளதாக பொய் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளார்.

எனவே பொதுமக்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் இணைய மோசடி தொடர்பில் மிக அவதானமாக இருக்குமாறு சாவகச்சேரி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.



# கிளிநொச்சியில் மருமகனின் தாக்குதலில் மாமனார் உயிரிழப்பு!

கிளிநொச்சியில் மருமகனின் தாக்குதலில் மாமனார் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே மிகுந்த கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி - அக்கராஜன் குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்கந்தபுரம் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்குள்ளான நிலையில் மாமனார் உயிரிழந்த சம்பவம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றிரவு இடம்பெற்றுள்ளது.

கணவன் மனைவி மீது தாக்குதல் மேற்கொண்டார். இந்நிலையில் மனைவி தனது தந்தை வீட்டுக்கு வந்துள்ளார். அங்கு வந்த கணவன் மீண்டும் மனைவியை தாக்கியவேளை அந்த பெண்ணின் தந்தை தாக்குதலை தடுக்க முற்பட்டார்.

இதன்போது மருமகனின் தாக்குதலுக்குள்ளான நிலையில் மாமனார் வைத்தியசாலை கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் 59 வயதான கதிரவேலு சிவராசசிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார். 25 வயதுடைய மருமகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் சேர்ந்து குறித்த சம்பவத்திற்கு உதவிய குற்றச்சாட்டில் அவரது சிறிய தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக அக்கராயன் குளம் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உலக செய்திகள் World News

# பிரேசிலில் ஆட்சி கவிழ்ப்பு சதியில் ஈடுபட்ட முன்னாள் அதிபர் கைது



பிரேசிலில் 2019 முதல் 2022-ம் ஆண்டு வரை அதிபராக இருந்தவர் ஜெயிர் பொல்சனாரோ (வயது 70). லிபரல் கட்சியைச் சேர்ந்த இவர் 2022-ல் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியை தழுவினார். இதில் தொழிலாளர் கட்சியை சேர்ந்த லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா வெற்றி பெற்று அதிபராக தேர்வு செய்யப்பட்டார். ஆனால் தேர்தலில் தான் தோல்வியடைந்ததை பொல்சனாரோ ஒப்புக்கொள்ளவில்லை.

எனவே மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் மீது சந்தேகம் இருப்பதாக கூறி ஆட்சி கவிழ்ப்பு சதியில் ஈடுபட்டார். இதனால் அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் வன்முறையில் ஈடுபட்டனர். அப்போது அரசு கட்டிடங்களை குறிவைத்து அவர்கள் தாக்குதல் நடத்தினர். ஆனால் ராணுவத்தின் முயற்சியால் இந்த சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆட்சி கவிழ்ப்பு சதிக்கு தலைமை தாங்கியதாக ஜெயிர் பொல்சனாரோவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இந்த வழக்கு விசாரணை பிரேசில் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதில் அவர் மீதான குற்றச்சாட்டு உறுதியானதால் பொல்சனாரோவுக்கு 27 ஆண்டுகள் 3 மாதம் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆட்சி கவிழ்ப்பு சதியில் தண்டனை பெறும் முதல் பிரேசில் அதிபர் இவர் என்பது குற.

# நைஜீரியயில் பாடசாலையில் கடத்தப்பட்ட மாணவர்கள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை 315 ஆக உயர்வு



ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் நைஜர் மாகாணத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவ பள்ளி ஒன்று செயல்படுகிறது. இங்கு 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்த பள்ளிக்குள் துப்பாக்கியுடன் ஆயுத கும்பல் நுழைந்தது. பின்னர் துப்பாக்கிமுனையில் 100-க்கும் மேற்பட்டோரை கடத்தி சென்றதாக தகவல் வெளியானது. தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் தற்போது 12 ஆசிரியர்கள் உள்பட 315 பேர் கடத்தப்பட்டது தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே கடந்த 17-ந்தேதி கெபி மாகாணத்தில் பள்ளிக்குள் நுழைந்து 25 மாணவிகள் கடத்தப்பட்டனர். இதனால் பாதுகாப்பு கருதி விடுதியுடன் கூடிய பள்ளிகளை தற்காலிகமாக மூட அரசாங்கம் உத்தரவிட்டு இருந்தது. அதனை மீறி பள்ளி செயல்பட்டதே இந்த கடத்தலுக்கு காரணம் என கூறப்படுகிறது. முன்னதாக மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் கிறிஸ்தவர்களை குறிவைத்து தாக்குதல் நடைபெறுவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் குற்றம் சாட்டி இருந்தார். இந்த சூழலில் அடுத்தடுத்து மாணவர்கள் கடத்தப்படுவது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சூடானில் ஊட்டச்சத்து குறைபாட்டால் 23 குழந்தைகள் உயிரிழப்பு




ஆப்பிரிக்க நாடான சூடானில் ராணுவத்துக்கும், ஆர்.எஸ்.எப். எனப்படும் துணை ராணுவ படையினருக்கும் இடையே நீண்ட கால மோதல்போக்கு நிலவியது. கடந்த 2023-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த கிளர்ச்சி உள்நாட்டு போராக வெடித்தது. 2.5 ஆண்டுகளுக்கு மேலாக தொடரும் இந்த உள்நாட்டு போரால் சுமார் 1.5 கோடி பேர் தங்களது குடியிருப்பை விட்டு வெளியேறினர். இதனால் அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் தவிக்கும் நிலை உருவானது. குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள் ஒரு வேளை உணவுக்கே வழியின்றி தவித்தனர். இதன் காரணமாக அங்குள்ள கோர்டோபான் பிராந்தியத்தில் கடந்த ஒரு மாதத்தில் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக 23 குழந்தைகள் இறந்ததாக சூடான் மருத்துவ குழு தெரிவித்துள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மவடக்கு மாகாணத்தில் சுற்றுலா சேவையை முழுமையாக மேம்படுத்த சில சவால்கள் உள்ளதாக வடக்கு ஆளுநர் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம் மற்றும் ஒட்டுமொத்த வடக்கு மாகாணமும் இன்று ஒரு புதிய மாற்றத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. இருப்பினும், சுற்றுலாத்துறை குறித்தும், குறிப்பாக உள்வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் நாம் முழுமையான வெற்றியடைவதற்குச் சில சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

இலங்கைக்கு உள்வரும் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் சங்கம் (SLAITO) வடக்குப் பிராந்தியத்தில் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையவர்களுடனான விசேட கலந்துரையாடல் ஒன்றை யாழ்ப்பாணம் ஜெட்விங் ஹோட்டலில் 25ம் திகதியன்று செவ்வாய்க்கிழமை நடத்தியது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

எமது பிரதேசத்தில் உயர்தரமான, சர்வதேச தரத்துக்கு இணையான தங்குமிட வசதிகள் இன்னும் குறைவாகவே உள்ளன. சுற்றுலாப் பயணிகள் தாம் செலவழிக்கும் பணத்துக்கு ஏற்ற பெறுமதியை எதிர்பார்க்கிறார்கள். அந்தத் தரத்தை நாம் உறுதி செய்ய வேண்டும். யாழ்ப்பாண நகருக்கு வெளியே, சுற்றுலாப் பயணிகள் செல்லக்கூடிய இடங்களில் அதிவேக இணைய வசதி, சீரான மின்சாரம் மற்றும் கழிவு முகாமைத்துவ வசதிகள் இன்னும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளன.

பலாலி விமான நிலையம் மற்றும் இந்தியாவுடனான கடல்வழிச் சேவைகள் விரிவடைந்து வருகின்றமை மகிழ்ச்சிக்குரியது. ஆயினும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நீண்ட பயண நேரம் சுற்றுலாவிகளுக்கு சிரமத்தை ஏற்படுத்துகிறது. எனவே, கட்டுநாயக்காவிலிருந்து பலாலிக்கான உள்ளூர் விமான சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்திருக்கின்றோம். அத்துடன், மாகாணத்துக்குள் சுற்றுலாவிகள் வசதியாகப் பயணிக்கக்கூடிய வீதிப் போக்குவரத்து மற்றும் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் உருவாக்கப்படுவது அவசியமாகும்.

மனிதவள மேம்பாடு விருந்தோம்பல் துறையில் முறையான பயிற்சி பெற்ற சமையல் கலைஞர்கள், வரவேற்பாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் குறைவாக உள்ளனர். அதேபோல், ஆங்கிலம் மட்டுமல்லாது வேறு பல சர்வதேச மொழிகளையும் கையாளக்கூடிய தொழில்முறை சுற்றுலா வழிகாட்டிகளுக்கான தேவை அதிகமாக உள்ளது. அனைத்துச் சுற்றுலாத் தலங்களிலும், விடுதிகளிலும் ஒரே மாதிரியான உயர்தர சேவையை வழங்குவதற்குப் போதிய பயிற்சியின்மை ஒரு தடையாக உள்ளது.

நாம் இன்றும் நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டை மற்றும் தீவுப்பகுதிகளை மட்டுமே மையப்படுத்திச் சுற்றுலாவை முன்னெடுத்து வருகிறோம். இதனைத் தாண்டிச் சூழல் சுற்றுலா, கலாசாரப் பட்டறைகள், பறவைகள் அவதானிப்பு மற்றும் உணவுச் சுற்றுலா போன்ற புதிய அனுபவங்களை உருவாக்க வேண்டும்.



வடக்கு மாகாணம் ஆன்மீகச் சுற்றுலாவுக்கான அதிக ஈர்ப்பைக் கொண்டுள்ளது. குறிப்பாக, மன்னாரில் இராமர் பாலத்தைப் பார்வையிடுவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பான பேச்சுக்கள் மன்னார் மாவட்டச் செயலரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அது வெற்றியடைவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன.

சுற்றுலாப் பயணப் பொதிகள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளன. மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுற்றுலாத் திட்டத்தை நாம் வகுக்க வேண்டும்.

பல வரலாற்று மற்றும் கலாசார இடங்கள் இன்னும் அடையாளம் காணப்படாமலோ அல்லது போதிய அடிப்படை வசதிகள் இன்றியோ காணப்படுகின்றன. சுற்றுலாத்தலங்களில் மலசலகூடங்கள் இல்லாமையும், இருப்பவை உரிய சுகாதார வசதியுடன் இல்லாமையும் பெரும் குறையாகும். உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக இவற்றை நிவர்த்தி செய்ய முயற்சிகள் எடுத்துள்ளோம்.

வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம், உள்ளூராட்சி சபைகள் மற்றும் தனியார் துறை ஆகியன ஒன்றிணைந்து செயற்படுவது வளங்களைச் சரியாகப் பங்கிடவும், தரத்தை உயர்த்தவும் உதவும். முதலீடுகளைச் சரியாக மேற்கொள்ளவும், சேவைகளை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணிகள் வருகை குறித்த சரியான தரவுகள் எமக்குத் தேவை. மாகாண நிர்வாகம் என்ற வகையில் எமது முழுமையான ஆதரவு என்றும் உங்களுக்கு உண்டு, என்றார்.

இக்கலந்துரையாடலில், இலங்கைக்கு உள்வரும் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் அமைப்பின் தலைவர் மற்றும் செயலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத் துறையின் நிகழ்ச்சித் திட்டத்தலைவர் பேராசிரியர் கலாநிதி சிவேசன் சிவானந்தமூர்த்தி, வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியக உறுப்பினர்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடையோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# மாவீரர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற குருதிக் கொடையும் மரக்கன்று வழங்கலும்!



மாவீரர் தினத்தை முன்னிட்டு இரத்த தான நிகழ்வு ஒன்று 26ம் திகதி அன்றையதினம் நாகர்கோவில் குரு குலம் சன சமூக நிலையத்தில் இடம்பெற்றது.

ஜனநாயக போராளிகள் கட்சியின் நிதிப் பங்களிப்பில், வடமராட்சி கிழக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இவ் குருதி நன்கொடை நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களுக்கு, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பின் குருதித்தான நிகழ்வு இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெய கோபி, ஜனநாயக போராளிகள் கட்சியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



இவ் குருதி நன்கொடை நிகழ்வில் பங்குகொண்ட குருதிக் கொடையாளர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# பருத்தித்துறை பிரதேச சபையின் 2026 ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது!




யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதேச சபையின் 2026ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 24-11-2025 அன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் அமர்வானது தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில், அன்று காலை 10:30 மணியளவில் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமான அஞ்சலி செலுத்தப்பட்டது.

20 உறுப்பினர்களில் 19 உறுப்பினர்கள் அன்றைய அமர்வில் கலந்துகொண்டனர். இந்நிலையில் 2026ம் ஆண்டிற்கான பாதீடு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.


## Tamilthakaval.org

## ஒரு இலவச சேவை -- A Free Service



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# வடக்கில் மாவீரர் துயிலும் இல்லங்கள் இம்மாத இறுதிக்குள் விடுவிக்கப்படலாம் என நம்பிக்கை தெரிவித்துள்ள அமைச்சர் சந்திரசேகரன்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வடக்கில் பாதுகாப்பு தரப்பினரின் கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகின்ற சில மாவீரர் துயிலும் இல்லங்களை இம்மாத இறுதிக்குள் விடுவிப்பதற்கான சாத்திய கூறுகள் தென்படுவதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை குட்டிச் சுவராக்கிய வாங்குரோத்து அரசியல்வாதிகள் இணைந்து ஆட்சியைக் கலைக்கப்போவதாக கூக்குரல் இட்டு வருகின்றனர்.

நாட்டை 70 வருட காலத்துக்கு மேலாக சீரழித்த வரலாற்றை எமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாற்றி அனைத்து இன மத மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு தாய் நாட்டைக் கட்டி எழுப்பி வருகிறோம்.

கடந்த காலங்களில் குடும்பமாக நாட்டை சூறையாடியவர்கள் துரத்தப்பட்ட நிலையில் நேர்மையான ஒரு அரசியல் கலாச்சாரத்தை எமது அரசாங்கம் முன்னெடுத்து வருவதை சகித்துக் கொள்ள முடியாத கூட்டம் இனவாதத்தை தூண்ட முனைகிறது.

எமது அரசாங்கம் தமிழ் மக்கள் யுத்தத்தில் இறந்த மாவீரர்களை நினைவு கூறுவதற்கு எந்த தடையும் ஏற்படுத்தவில்லை. கடந்த காலங்களில் நினைவிடங்கள் உடைக்கப்பட்ட, கொடிகள் அறுத்தெறியப்பட்ட வரலாறுகளையும் மாற்றி பூரணமாக நினைவு கூரும் உரிமையை வழங்கியது எமது அரசாங்கமே.

நாட்டின் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க பாதுகாப்பு தரப்பிடம் இருக்கின்ற துயிலும் இல்லங்களை விடுவிப்பதற்கான அறிவுறுத்தல்களை பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்கனவே வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் இம்மாத இறுதிக்குள் சில துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்படலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அதேபோல வடக்கில் காணி விடுவிப்புகள் திட்டமிட்டபடி படிப்படியாக இடம்பெறும். அதில் விதமான தயக்கமும் இல்லை.

அண்மையில் வன்னி நிலப்பரப்பில் இராணுவத்திடம் இருந்த ஒரு பகுதி காணி விக்கப்பட்ட நிலையில் அதனை உரியவர்களுக்கு வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அறிகிறேன்.

எமது அரசாங்கம் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சனைக்கான தீர்வினை காண்பதற்காக புதிய அரசியலமைப்பு தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறது. அதைப் பொறுக்க முடியாத சிலர் தெற்கிலும் வடக்கிலும் இருக்கின்ற நிலையில் அவர்கள் ஏதாவது குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நினைப்பில் இருக்கிறார்கள்.

அண்மையில் திருகோணமலையில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்களுக்கு பின்னால் இனவாத சக்திகளின் செயற்பாடுகள் இருப்பதாக தகவல்கள் வெளியாகிய உள்ளது. இவர்களின் நோக்கம் மக்களை வாழவைப்பது அல்ல தமது அரசியல் இருப்புக்களை தக்கவைத்துக் கொண்டு நாட்டை சூறையாடுவதே நோக்கம்.

இதை நான் விளாவரையாக கூற வேண்டிய தேவையில்லை. கடந்த காலங்களில் நாட்டை எப்படி ரணில் ராஜபக்சர்கள் சூறையாடினார்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்கு தெரியும்.

ஆகவே எமது அரசாங்கத்தை வீழ்த்துவதாக கூறிக்கொண்டு இனங்களுக்கு இடையில் முறுகல் நிலையை தோற்றுவிப்பதற்கு வங்குரோத்து அரசியல்வாதிகள் பலவிதமான செயற்பாடுகளை செய்வார்கள். மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் வாரம்



மானிப்பாய் பிரதேச சபையின் ஏற்பாட்டில் மானிப்பாய் நகர் முழுவதும் சிவப்பு மஞ்சள் கொடி கட்டப்பட்டதுடன் சபை அலுவலகம் முன்பாகவே விசேடமாக அமைக்கப்பட்ட வளாகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அஞ்சலி நிகழ்வை தொடர்ந்து ஏற்றிய தீபங்களுடன் சபைக்கு பிரசன்னமான உறுப்பினர்கள் அங்கும் அஞ்சலி செலுத்தினர். பிரதிநிதித்துவப்படுத்தும் 28 உறுப்பினர்களில் ஈ.பி.டி.பி சார்பில் இருவரும் தேசிய மக்கள் சக்தி சார்பில் ஒருவரும் மாத்திரமே இந்நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.




Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# நவம்பர் பதின்மூன்றும் நவம்பர் இருபத்தியேழும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



இம்மாதம் 13ஆம் தேதி ஜேவிபி அதனுடைய தியாகிகள் தினத்தை அனுஷ்டித்தது. கொழும்பு விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கில் இந்த நிகழ்வு நடந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாளும் ஜேவிபியின் கார்த்திகைத் தியாகிகள் நாளும் ஒரே மாதத்தில் வருவது ஒரு நூதனமான ஒற்றுமை. விடுதலைப் புலிகள் இயக்கத்துடைய முதலாவது மாவீரர் தன் உயிரை தியாகம் செய்த நாள் மாவீரர் நாளாக அனு'டிக்கப்படுகிறது. ஜேவிபி தலைவர் ரோகன விஜயவீர அரச படைகளால் கைது செய்யப்பட்டு, குரூரமாகக் கொல்லப்பட்ட நாள் அந்த அமைப்பின் தியாகிகள் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

இலங்கைத் தீவில் இரண்டு ஆயுதப் போராட்டங்களை முன்னெடுத்து, இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட, இரண்டு தடவைகள் நசுக்கப்பட்ட, ஓர் அரசியல் இயக்கம் ஜேவிபி. ஆனால் தன் சொந்த சாம்பலில் இருந்து மீண்டெழ முடியும் என்பதற்கு இந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்ல முழு உலகத்திலும் மிக அரிதான முன்னுதாரணங்களில் அதுவும் ஒன்று.

அன்றைய நிகழ்வில் விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கம் சிவப்பு நிறச் சட்டைகளாலும் முதிய பெண்களின் கண்ணீராலும் பிரகடனங்களாலும் நிறைந்திருந்தது. பெரும்பாலானவர்கள் சிவப்பு நிற மேலாடைகளோடு வந்திருந்தார்கள். அரங்கின் முன்வரிசையில் வயதான முதிய பெண்கள் சிலர் காணப்பட்டார்கள். மெலிந்த சதைப்பிடிப்பில்லாத முகங்கள். எடுப்பில்லாத உடுப்புகள். மென்மையான சோக இசையின் பின்னணியில் அவர்களில் சிலர் அழுதார்கள். அவர்களுடைய கண்ணீர் உண்மையானது. அன்னையரின் கண்ணீர் பொய்யானது அல்ல. அன்னையரின் கண்ணீர் எல்லா நினைவு நாட்களிலும் ஒன்றுதான். அதில் உள்ள உப்புச் சுவையும் ஒன்றுதான்.

அந்த நிகழ்வின் ஒளிப்படங்களை என்னோடு பகிர்ந்த ஒரு நண்பர், என்னிடம் கேட்டார், "நீங்கள் சொல்வது போல ஜேவிபி அதன் சொந்தச் சாம்பலில் இருந்து மீண்டெழுந்த ஓர் இயக்கம். இப்பொழுது அரசாங்கமாக அந்த நிகழ்வை பெருமெடுப்பில் ஒழுங்குப்படுத்தியிருக்கிறது" என்று.

நான் அவரிடம் கேட்டேன் "அது ஒரு அரச நிகழ்வா அல்லது ஒரு இயக்கத்தின் அல்லது கட்சியின் நினைவு நிகழ்வா?" என்று. அதில் நாட்டின் அரசுத் தலைவரும் உட்பட பிரதான அமைச்சர்கள் பங்குபற்றினார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் அது ஒரு அரசு நிகழ்வு போலத் தோன்றும். ஆனால் அது பெருமளவுக்கு ஓர் இயக்க நிகழ்வுதான்; ஒரு கட்சி நிகழ்வுதான். அங்கே அரசுத் தலைவருக்கும் அமைச்சருக்கும் பாதுகாப்பாக படையினர் ஆங்காங்கே காணப்பட்டார்கள். எனினும் வழமையான அரசு நிகழ்வுகளைப்போல சீருடை அணிந்த படையினரின் பிரசன்னம் தூக்கலாக வெளித்தெரியவில்லை. அந்தப் படையினரின் சீருடைக்கும் அங்கு வந்திருந்த பெரும்பாலானவர்களின் சிவப்பு உடுப்புகளுக்கும் பொருந்தவேயில்லை. விறைப்பாக நின்ற அந்தப் படையினரின் துப்பாக்கிகளும் அழுது கொண்டிருந்த முதிய பெண்களின் கண்ணீரும் ஒன்றுக்கொன்று எதிரானவை.

இப்பொழுது ஜேவிபி ஆளுங்கட்சி. அதுதான் அரசாங்கம். அப்படிப் பார்த்தால் அரசாங்கத்தின் தியாகிகள் நாட்டுக்கும் தியாகிகள்தானே? அந்த அடிப்படையில் அது ஓர் அரச நிகழ்வாகத்தான் அமைய வேண்டும். ஆனால் அப்படியல்ல.

அங்கே இறந்தவர்களுக்காக மலர்கள் வைக்கப்பட்டன. பாடல்கள் இசைக்கப்பட்டன. உரைகள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் படையினரின் ராணுவ அணிவகுப்போ, மரியாதை வேட்டுக்களோ தீர்க்கப்படவில்லை. அரசாங்கத்தின் தேசிய தியாகிகளின் நாளில் படையினரின் அணிவகுப்பு இருக்கும்; பீரங்கிகளில் முழங்கும்; முப்படை தளபதிகளும் பிரசன்னமாகி இருப்பர்.

ஆனால் 13-ஆம் தேதி விகார மகாதேவி பூங்காவின் வெளியரங்கில் நடந்தது ஒரு அரச நிகழ்வு அல்ல. நாட்டை ஆளுங்கட்சி அதன் தியாகிகள் நாளை தேசிய விழாவாகக் கொண்டாடவில்லை. அது தனக்கென்று தனியாக ஒரு தியாகிகள் நாளை அனுஷ்டிக்கின்றது. அதிலும் குறிப்பாக, ஜேவிபியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் தனித்தனியாக நினைவு நாட்களை அனுஷ்டிக்கிறார்கள். ஜேவிபியின் முதலாவது ஆயுதப் போராட்டம் நடந்த ஏப்ரல் ஐந்தாம் திகதியை ஒரு பகுதியினர் அனுஷ்டிக்கிறார்கள். நவம்பர் 13ஐ ஜேவிபியிடமிருந்து பிரிந்து சென்றவர்கள் தனியாக அனு'டிக்கிறார்கள். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்கு என்று தனித்தனியாக தியாகிகள் நாளை அனுஷ்டிப்பது போல.

ஆனால் இங்கு கவனிக்கப்பட வேண்டிய வேறுபாடு என்னவென்றால், ஆளுங்கட்சியாக உள்ள ஜேவிபியின் நினைவு நாள் ஓர் அரசு நிகழ்வாக கொண்டாடப்படவில்லை என்பதுதான். சிங்களபௌத்த அரசின் தேசியத் தியாகிகள் நினைவு நாள் வேறாகவும் ஜேவிபி அரசாங்கத்தின் தியாகிகள் நினைவு நாள் வேறாகவும் இருக்கின்றன என்பதுதான்.

சிறிய இலங்கை தீவு தன்னகத்தே பல தியாகிகளின் நாட்களைக் கொண்டிருக்கிறது. படையினரின் தியாகிகள் தினம், ஜேவிபியின் தியாகிகள் தினம், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாள், எனைய தமிழ் இயக்கங்களின் தியாகிகள் நாள்... என்று பல தியாகிகளின் நாட்கள் இச்சிறிய தீவில் உண்டு.

இலங்கை ராணுவம் தனக்கென்று தியாகிகளின் நாள் ஒன்றைக்கொண்டாடுகிறது. அது முழுஅளவிலான அரச நிகழ்வு. முப்படையினரின் பிரசன்னம் அங்கே இருக்கும். படை அணிவகுப்புகள் இருக்கும். பீரங்கிகள் முழங்கும். அரச பிரதானிகள், முப்படைத் தளபதிகள் வணக்கம் செலுத்துவர். அவை ஸ்ரீலங்காவின் தேசிய நிகழ்வுகள்.

ஜேவிபி இப்பொழுது அரசாங்கமாக இருந்த போதிலும் கூட, அதன் தியாகிகள் தினம் தனியே கொண்டாடப்படுகிறது. ஜேவிபியின் பிரதானியான அனுர ஒரு ஜனாதிபதியாக, முப்படைகளின் தளபதியாக இருக்கிறார். ஆனால் அவருடைய தோழர்களை நினைவு கூரும் நாளில் முப்படைகளின் அணிவகுப்பு இல்லை. அது இப்பொழுதும் ஓர் அரச நிகழ்வு அல்ல.

விகாரமாதேவி பூங்காவில் கூடிய ஜேவிபியினர் சிவப்புச்சட்டை அணிந்திருந்தார்கள். விகார மகாதேவி பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக நினைவுச் சின்னத்திலும் சிவப்பு நிறம் இருந்தது. ஆனால் அந்த சிவப்பு கம்யூனிச சிவப்பு அல்ல. நாட்டில் தற்பொழுது நடப்பது கம்மியூனிச ஆட்சியும் அல்ல. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்ட ஓர் ஆட்சி.

ஆனால் லண்டனில் உரை நிகழ்த்திய ரில்வின் சில்வா, "வீரர்கள் சிந்திய குருதியை ஏற்று சிவப்பு மலர்கள் மலரட்டும்" என்று கூறினார். அந்தச் சிவப்பு மலர்கள் நிச்சயமாக மார்க்சிய சித்தாந்தத்தை பிரதிபலிக்கவில்லை. அவ்வாறு ஜேவிபி ஒரு மெய்யான மார்க்சிஸ்ட் அமைப்பாக இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொண்டிருந்திருக்கும்.

ரில்வின் உரை நிகழ்த்திய அதே கூட்டத்தில் ஜேவிபியின் பிரதித் தலைவராக இருந்த உபதிச கமநாயக்கவின் மனைவி உரை நிகழ்த்தும்போது, மூன்றாவது தலைமுறை ஜேவிபியினர் நாட்டை ஆளும் வளர்ச்சிக்கு வந்திருப்பதை பெருமையோடு சுட்டிக்காட்டினார். சிறு ஓடையாக இருந்த இயக்கம் இப்பொழுது பெரும் நதியாக மாறிவிட்டது என்றும் என்றும் சொன்னார்.

ரில்வின் சில்வா லண்டனில் சிவப்பு மலர்களைப்பற்றி பேசிய அதே காலப்பகுதியில் கொழும்பில் அவர்களுடைய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் புதிதாக வந்திருக்கும் கனேடிய தூதுவருக்கு என்ன சொன்னார்? கனடாவில் உள்ள தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் இலங்கையில் பிரிவினை வாதத்தை ஊக்குவிக்கும் கருத்துக்களை முன்னெடுப்பதற்கு எதிராகவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சின்னம் போன்றவற்றை பகிரங்கமாக பயன்படுத்துவதற்கு எதிராகவும் கனேடிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கனடாவில் வாழும் சில செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகள், இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சிக்குப் பாதகமாக அமைந்துள்ளன என்றும் அமைச்சர் ஹேரத் கூறியுள்ளார்.

அதாவது நாட்டில் தடை செய்யப்பட்ட இயக்கத்தின் சின்னங்களை கனடாவில் உள்ள தமிழர்கள் உயர்த்திப் பிடிப்பதை அவர் கனேடியத் தூதுவருக்குச் சுட்டிக்காட்டுகிறார். கனடாவிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற அடிப்படையில் மேற்சொன்ன செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதிக்குள் ஜேவிபி நாட்டில் இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்டது. அவ்வாறு இரண்டு தடவைகள் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம் கனடாவில் தடை செய்யப்பட்ட சின்னங்களை தமிழ் மக்கள் முன்னிறுத்துவதைத் தடுக்க வேண்டும் என்று கேட்கின்றது.

தனது இயக்கத்தின் தியாகிகளின் நாளும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் தியாகிகளின் நாளும் ஒன்று அல்ல என்பது தெளிவாகத் தெரியும் ஓர் அரசியல் சூழலில், அமைச்சர் விஜித ஹேரத் கனேடிய தூதுவரிடம் அவ்வாறு கூறியுள்ளார். கார்த்திகை மாதத்தில் நாட்டில் இனரீதியாக இரு வேறு நினைவு தினங்கள் அனு'டிக்கப்படும் ஓர் அரசியல் யதார்த்தத்தை தடைகளின் மூலம் மாற்ற முடியாது.

இந்த நாட்டில் ஏன் இனரீதியாக இரு வேறு நினைவு நாட்கள்? எல்லாத் தடைகளையும் மீறி தமிழ் மக்கள் கடந்த 17 ஆண்டுகளாக ஏன் மாவீரர் நாளை தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறார்கள்? இனரீதியாக இரண்டு வேறு தியாகிகள் தினங்களைக் கொண்ட ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சராகிய விஜித ஹேரத் கனேடிய தூதுவருக்கு கூறுகிறார், அரசாங்கம் தேசிய ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதாக. விகாரமகாதேவி பூங்காவில் தற்காலிகமாக உருவாக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னத்தில் பூசப்பட்டிருந்த சிவப்பு வர்ணம் வெளிறும் இடம் இதுதான்.

---

## வீணாவின் கவிக்கணை

அலைகடல்
உருண்டு திரண்டு
வந்து வந்து போக,
இது
நிலைக்குமோ
நிலைக்காதோ
என்று கரையும்
தான் ஏங்க,
கரைக்கும் தெரியும்,
கடலுக்கும் தெரியும்,
ஒன்றின்றி மற்றொன்று
இல்லை என்று,
இருந்தும் இந்த கலக்கம்
தான் ஏனோ?

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்கள பெயர்ப்பலகை இடுவதற்கான செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் எதிர்ப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட இரண்ட இடங்களில் 25-11-2025 அன்று மாலை தொல்லியல் திணைக்கள அதிகாரிகளும் வெல்லாவெளி பொலிஸாரும் இணைந்து பெயர் பலகை இடுவதற்கான நடவடிக்கைகள் முன்னடுப்பட்ட நிலையில் பொதுமக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக அங்கிருந்து சென்றனர்.

போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி கல்லடி பிள்ளையார் ஆலயம் மற்றும் எல்லைப்பகுதியான கண்ணன்புரம் ஆகியவற்றில் இந்த தொல்பொருள் திணைக்கள பெயர்ப்பலகை இடுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கொட்டும் மழைக்கும் மத்தியிலும் பொதுமக்கள் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்தன் காரணமாக பெயர்ப்பலகை இடும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

கடந்த 21 ஆம் திகதியும் கண்ணன்புரம் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினால் பெயர்ப்பலகை இடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் பிரதேசசபையின் உறுப்பினர்கள்,பொதுமக்கள் தெரிவித்த கடும் எதிர்ப்பு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதேபோன்று 25-11-2025 அன்று மாலையும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் வெல்லாவெளி பொலிஸார் சென்று தொல்பொருள் பெயர்ப்பலகையினை இடுவதற்கு முயற்சிகளை முன்னெடுத்தபோதும் அவர்களை செல்லவிடாது பொதுமக்கள் தடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கண்ணன்புரம் பகுதியானது அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்பகுதியாகவும் நூறுவீதம் தமிழர் பகுதியாகவும் காணப்படுவதனால் தொல்லியல் தொடர்பான செயற்பாடுகள் தமது இயல்பு வாழ்க்கையில் பாதிப்பினை ஏற்படுத்தும் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் தொல்லியல் என்ற போர்வையில் பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் தொல்லியல் என்றால் பௌத்த மதத்தின் அடையாளம் என்று மட்டுமே நோக்கப்படுவதன் காரணமாகவும் இதனை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதன்போது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கமும் இடம்பெற்றதுடன் தமது பகுதிக்குள் தொல்பொருள் பெயர்ப்பலகையினை இடுவதற்கு நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.



இதன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டதுடன் பெருமளவான பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்த நிலையில் பெருமளவான பொதுமக்களும் தமது எதிர்ப்புகளை குறிக்கும் வகையில் வீதியில் குமிந்திருந்ததன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டது.

தொல்பொருள் பதாகை என்பது ஒரு அடையாளத்திற்கு இடப்படுவது எனவும் அதன்மூலம் வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படமாட்டாது என பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டபோதிலும் அதனை பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளாது அதற்கு எதிராக கோசங்களை எழுப்பினார்கள்.

தாங்கள் யானைப்பிரச்சினை, குடிநீர்ப்பிரச்சினை, வீதிப்பிரச்சினை என பல்வேறு கஸ்டங்களுடன் வாழும்போது எந்த கரிசனையும் கொள்ளாதவர்கள் இன்று தொல்பொருள் தொடர்பில் கரிசனைகொண்டுவந்திருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது எனவும் இதற்கு ஒருபோதும் அனுமதிக்கமுடியாது எனவும் மக்கள் தெரிவித்தனர்.

இதன்போது வெல்லாவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் சம்பவ இடத்திற்கு வருகைதந்து பொதுமக்களுடன் கலந்துரையாடியபோதிலும் தொல்லியல் பெயர்ப்பலகை இடுவதற்கு அனுமதிக்கமுடியாது என தொடர்ச்சியாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதன்காரணமாக பொதுமக்கள் எதிர்ப்பதன் காரணமாக இதனை இடைநிறுத்துவதாகவும் எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் தங்களது பெயர் விபரங்களை வழங்குமாறு கோரி பொலிஸார் எதிர்ப்பு தெரிவித்தவர்களின் பெயர் விபரங்களை பதிவுசெய்துகொண்டு அங்கிருந்து சென்ற நிலையில் போராட்டம் முடிவுக்கு வந்தது. இதேபோன்று வெல்லாவெளி கல்லடி பிள்ளையார் ஆலயப்பகுதியிலும் பெயர்ப்பலகை இடும் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் 71வது பிறந்தநாள் வல்வெட்டித்துறை மண்ணில் வெகு விமர்சையாக கொண்டாடப்பெற்றது









பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறை மண்ணில் அவரது இல்லத்திற்கு முன்பாக இந்த பிறந்தநாள் கொண்டாட்டம் இடம்பெற்றது.

இதன்போது தமிழ் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் கேக்கினை வெட்டி வைத்ததுடன், பிறந்தநாள் கலந்துகொண்டவர்களுக்கு கேக், இனிப்புகள் போன்றன வழங்கப்பட்டன. இதன்போது பட்டாசுகளும் வெடிக்கப்பட்டன.




# லண்டனில் ஜே.வி.பி. தலைவர் ரின்வின் சில்வாவற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு ஈ.பி.டி.பி கண்டனம்!

புலம்பெயர் தமிழ் மக்களில் ஒரு பிரிவினர் கோமா நிலையில் இருந்து மீண்டு யதார்த்தத்தினை புரிந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள ஈ.பி.டி.பி. லண்டனில் ஜே.வி.பி. தலைவர்களுள் ஒருவரான ரின்வின் சில்வாவற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வன்முறை ஆர்ப்பாட்டத்திற்கு தமது கண்டனத்தினையும் வெளிப்படுத்தி இருக்கின்றது.

யாழ்பபாணம். ஊடக மையத்தில் 26ம் திகதியன்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந்தினால் குறித்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், விமர்சனங்களுக்கு அப்பால் கடந்த ஆயுத வழிமுறையில் ஈடுபட்டு பின்னர் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்த தரப்பு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருக்கின்றது.

குறித்த, ஜேவிபி தரப்பு தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றது. புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட போதிலும் அந்த அமைப்பு சார்பாக உயிரழந்தவர்களை அவர்களின் உறவுகள் நினைவுகூர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படும் என்கிறார்கள். அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக பரிசீலிப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். இவ்வாறான சூழலில் ரில்வின் சில்வாவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படுவதை அறிவுசார்ந்து சிந்திக்கின்ற யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

தற்போதைய சூழலில் இவ்வாறான செற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் கோமா நிலையில் இருக்கின்றார்களோ என்ற சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

ஒரு காலத்தில் இந்த நாட்டிலே தமிழ் மக்கள் சார்பிலே ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 87 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய போராட்டத்தின் பின்னர் ஈ.பி.டி.பி. மாற்று கருத்துக்களை வெளிப்படுத்தி வந்திருந்தது.

இருந்தாலும், ஆயுதப் போராட்டத்தின் மூலம் இலக்கை அடைய முடியும் என்று ஒரு தரப்பு செயல்பட்டு வந்தது. அதனை வலுப்படுத்தும் வகையில் புலம்பெயர் நாடுகளில் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் இன்று அந்த நிலை இல்லை என்பதையும், இப்போது முன்னெடுக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள் தாயகத்தில் வாழும் எமது மக்களின் இருப்பிற்கும் அரசியல் எதிர்காலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

# நாகர்கோவிலில் பழுதடைந்து வீதிக்கரையோரத்தில் நிற்கும் அரச பேருந்து – பரீட்சை எழுதும் மாணவர்கள் அவதி!



யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இருந்து 25ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலை பருத்தித்துறை நோக்கி 6 மணிக்கு புறப்பட்ட அரசு பேருந்து நாகர்கோவில் பகுதியில் பழுதடைந்து காணப்பட்டது.



உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுடன் சென்ற குறித்த பேருந்து ஏழு மணி அளவில் நாகர்கோவில் பகுதியில் பழுதடைந்து காணப்பட்டது.

இதனால் பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள், அரச அதிகாரிகள், ஏனைய தொழில் துறைகளுக்குச் செல்லும் அதிகாரிகள் உரிய நேரத்திற்கு செல்ல முடியாமல் இடை நடுவில் உள்ளதை அவதானிக்க முடிந்தது.

யாழ். வடமராட்சி கிழக்கு பகுதியில் பயன்பாட்டில் இருக்கும் அரச பேருந்துகள் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக பழுதடைந்து வருவதால் உடனடியாக புதிய பேருந்தை தருமாறு மக்கள் பலமுறை கோரிக்கை விடுத்த போதும் மக்களின் கோரிக்கைக்கு இதுவரை உரியவர்கள் செவி சாய்க்கவில்லை என்று மக்களால் குற்றம் சாட்டப்படுகிறது.

பழுதடைந்த அரச பேருந்துகளால் அவதிப்படும் வடமராட்சி கிழக்கு மக்களின் அவசர கோரிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் உடன் தீர்த்துத்தருமாறு வடமராட்சி கிழக்கு மக்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

உலக செய்திகள்
World News

# விங் கமாண்டர் நமன்ஷ் சியால் வீரவணக்கம் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்





விங் கமாண்டர் நமன்ஷ் சியால் அவர்களுக்கு வீரவணக்கம் என்று தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

துபாய் ஏர் ஷோ நிகழ்ச்சியில் விமான சாகசத்தின்போது ஏற்பட்ட விபத்தில் விங் கமாண்டர் நமன்ஷ் சியால் உயிரிழந்தார். துபாய் ஏர்ஷோ 2025 இல் இந்திய விமானப்படை தேஜாஸ் போர் விமானம் விபத்துக்குள்ளானதில், விமானி விங் கமாண்டர் நமன்ஷ் சியால் உயிரிழந்த சம்பவம் நிகழ்ச்சியில் கூடியிருந்த பார்வையாளர்கள் உட்பட அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தேஜாஸ் போர் விமான அதன் திட்டமிடப்பட்ட எட்டு நிமிட சாகசத்தைக் காட்டத் தொடங்கியது, ஆனால் திடீரென்று கீழ்நோக்கி விழுந்து தீப்பிடித்தது. சில நொடிகளிலேயே விமானம் விழுந்து பயங்கர வெடிப்பு ஏற்பட்டதால், விமானத்தை இயக்கிய இந்திய விமானி சரியான நேரத்தில் அதிலிருந்து வெளியேற முடியவில்லை. ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் மத்தியில் விமானம் விபத்துக்குள்ளான சம்பவம் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# "தி.மு.க.வின் கொள்கையே கொள்ளைதான்" – விஜய் பேச்சு



தமிழக சட்டசபை தேர்தலை எதிர்கொள்ள விஜய் தலைமையிலான த.வெ.க. தீவிரமாக தயாராகி வருகிறது. கரூர் சம்பவத்திற்கு பிறகு மீண்டும் மக்கள் சந்திப்பை விஜய் இன்று தொடங்கி இருக்கிறார். முன்னதாக சேலத்தில் இருந்து மக்கள் சந்திப்பை தொடங்க இருந்தார். ஆனால் அனுமதி பெறுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அந்த பயணம் தள்ளிவைக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையே காஞ்சீபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள ஒரு தனியார் பொறியியல் கல்லூரி வளாக உள் அரங்கத்தில் விஜய்யின் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த கூட்டத்தில் விஜய் பேசியதாவது: நாட்டிற்காக உழைப்பதற்கே அண்ணா பிறந்தார், பொதுநலத்தில் தானே நாள் முழுவதும் கண்ணாய் இருந்தார் என்ற எம்.ஜி.ஆர். பாடலை அனைவரும் கேட்டிருப்பீர்கள். அப்படிப்பட்ட தலைவரான அறிஞர் அண்ணா பிறந்த இடம்தான் இந்த காஞ்சீபுரம் மாவட்டம். தன்னுடைய வழிகாட்டி என்பதால், தனது கட்சியின் கொடியில் அறிஞர் அண்ணாவை வைத்தார் எம்.ஜி.ஆர். ஆனால் அறிஞர் அண்ணா ஆரம்பித்த அந்த கட்சியை, அதன் பிறகு கைப்பற்றியவர்கள் என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது மக்களுக்கு தெரியும். தனிப்பட்ட முறையில் தி.மு.க.வுக்கும் எங்களுக்கும் எந்த பிரச்சினையும் கிடையாது. அவர்கள் வேண்டுமானால் நம் மீது வன்மத்தோடு இருக்கலாம், ஆனால் நாம் அப்படி இல்லை. நம்மிடம் பொய் சொல்லி ஏமாற்றி ஆட்சிக்கு வந்து நல்லது செய்வதுபோல் நடிப்பவர்கள் நாம் எப்படி கேள்வி கேட்காமல் இருக்க முடியும்? இதை காஞ்சி மண்ணில் இருந்து நான் சொல்வதற்கு காரணம், நமது முதல் களப்பயணம் தொடங்கியதே பரந்தூரில் இருந்தது.

# ஆந்திராவில் சத்திய சாய் பாபா நூற்றாண்டு விழா



ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில், ஸ்ரீ சத்திய சாய் பாபாவின் நூற்றாண்டு விழா கொண்டாட்டம் நடைபெற்று வருகிறது. இந்த விழாவில் பல்வேறு கலாசார நிகழ்ச்சிகள், ஆன்மிக இசைக் கச்சேரிகள், சத்திய சாய் பாபாவின் வாழ்க்கை மற்றும் தொண்டுகளை எடுத்துரைக்கும் கண்காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. முன்னதாக இந்த விழாவில் பிரதமர் மோடி, அதிபர் திரவுபதி முர்மு உள்பட பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில், சத்திய சாய் பாபா நூற்றாண்டு விழாவில் துணை அதிபர் சி.பி.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார். அவரை ஆந்திர முதல் அமைச்சர் சந்திரபாபு நாயுடு வரவேற்றார். பின்னர் இந்த விழாவில் பேசிய சி.பி. ராதாகிருஷ்ணன், சத்திய சாய் பாபா தனது வாழ்க்கை மற்றும் போதனைகள் மூலம் லட்சக்கணக்கான மக்களை ஊக்குவித்துள்ளார் என்றும் இளைஞர்கள் அவரது பாதையை பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# "தனுஷ் ஒரு அசாதாரண நடிகர்" என்கிறார் நடிகை கிரித்தி சனோன்




நடிகர் தனுஷ் தமிழ் மட்டுமில்லாமல், டோலிவுட், பாலிவுட் மற்றும் ஹாலிவுட் என எல்லா மொழிகளிலும் நடித்து வருகிறார். அதேபோல், அவர் ஒரு நடிகர் மட்டுமல்ல, பாடகர், இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர் என பன்முகத் திறமைகளைக் கொண்டுள்ளார்.

தனுஷ் தற்போது நடித்துள்ள இந்தி திரைப்படம் "தேரே இஷ்க் மே". இந்தப் படத்தில் கிரித்தி சனோன் கதாநாயகியாக நடித்திருக்கிறார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். இப்படம் வருகிற 28 ஆம் தேதி தமிழ், இந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் வெளியாக உள்ளது. இதற்கிடையில், ஒரு நிகழ்வில், தனுஷுக்கு ஜோடியாக நடித்த அனுபவத்தை கிரித்தி சனோன் பகிர்ந்துகொண்டார். தனுஷ் ஒரு அசாதாரண நடிகர் என்றும், அவருடன் நடிப்பது மிகவும் உற்சாகமாக இருப்பதாகவும் கூறினார். தனுஷிடமிருந்து நிறைய கற்றுக்கொண்டதாகவும் இருவரும் பல படங்களில் நடிக்க விரும்புவதாகவும் அவர் கூறினார்.

"தேரே இஷ்க் மே" படத்தை ஆனந்த் எல் ராய் இயக்கியுள்ளார். இந்தப் படத்தை டி. சீரிஸ் பதாகையின் கீழ் ஆனந்த எஸ். ராய், ஹிமான்ஷு சர்மா, பூஷன் குமார் மற்றும் கிருஷ்ணா குமார் ஆகியோர் தயாரித்துள்ளனர்.

# கவின் – ஆண்ட்ரியா நடித்த "மாஸ்க்" படத்தின் முதல் நாளில் ரூ.1.5 கோடி வசூல்



அறிமுக இயக்குனர் விகர்னன் அசோக் இயக்கத்தில் கவின் நடித்துள்ள படம் "மாஸ்க்". இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ள தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையும், பாடகியுமான ஆண்ட்ரியா, வெற்றிமாறனின் கிராஸ் ரூட் பிலிம்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளார்.

இப்படத்தில் தெலுங்கு நடிகையான ருஹானி சர்மா கதாநாயகியாக நடித்துள்ளார். இவர்களை தவிர, சார்லி, பாலா சரவணன், விஜே அர்ச்சனா, சந்தோஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஜி.வி.பிரகாஷ் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். தேர்தலில் விநியோகிக்க வைத்திருந்த ரூ.440 கோடி பணம் கொள்ளைப் போனதை மையமாக கொண்டு படம் எடுக்கப்பட்டுள்ளது.

இப்படம் தொடர்பான முன்னோட்டம் மற்றும் பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. இதனை தொடர்ந்து "மாஸ்க்" படம் உலகம் முழுவதும் வெளியானது. இந்த நிலையில், "மாஸ்க்" படம் வெளியான முதல் நாளில் தமிழ்நாட்டில் ரூ.1.5 கோடி வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் உலகளவில் இப்படம் 2 கோடிக்கும் மேல் வசூலித்திருக்கும் என தகவல் வெளியாகி உள்ளது. அதுமட்டுமின்றி வெளியான படங்களில் அதிக வசூல் செய்த படமும் "மாஸ்க்".

# "பென்ஸ்" திரைப்பட பதிவேற்றம் கொடுத்த நிவின் பாலி



பிரபல இயக்குனர் லோகேஷ் கனகராஜின் "ஜி ஸ்குவாட்" நிறுவனம் தயாரிப்பில் "பென்ஸ்" திரைப்படம் உருவாகி வருகிறது. ராகவா லாரன்ஸ் நடிப்பில் பாக்கியராஜ் கண்ணன் இத்திரைப்படத்தை இயக்குகிறார். இப்படத்திற்கு லோகேஷ் கனகராஜ் கதை எழுதியுள்ளார். இயக்குநர் பாக்கியராஜ் கண்ணன் ஏற்கனவே "ரெமோ", "சுல்தான்" உள்ளிட்ட திரைப்படங்களை இயக்கியுள்ளார். "பென்ஸ்" திரைப்படம் லோகேஷ் சினிமாடிக் யூனிவெர்ஸ்-ல் ஒரு அங்கமாக உருவாகிறது.

இப்படத்திற்கு இளம் இசையமைப்பாளரான சாய் அபயங்கர் இசையமைக்கிறார். படத்தில் நடிகர் மாதவன் ஒரு கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார். ட்வின் ஃபிஷ் வால்டர் என்ற வில்லன் கதாப்பாத்திரத்தில் நிவின் பாலி நடிக்கிறார். "பென்ஸ்" திரைப்படத்தில் நடிகர் ரவி மோகன் நடிக்கிறார். இதன் மூலம் அவர் லோகேஷ் சினிமாட்டிக் உலகத்திற்கு அடியெடுத்து வைக்கிறார். இப்படத்தில் ராகவா லாரன்ஸ் இணையாக கதாநாயகன் கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார்.

மேலும், இவர் "கைதி 2" மற்றும் "விக்ரம் 2" படத்திலும் நடிக்க இருக்கிறார் என்ற தகவல் வெளியானது. நடிகை சம்யுக்தாவும் நடித்து வருகிறார். இதனை தொடர்ந்து படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்து அடுத்த கட்ட படப்பிடிப்பு.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

உங்கள் உடல் வலிகளிலிருந்தும் தசைப் பிடிப்பு காரணமான உபாதைகளிலிருந்தும்
தகுந்த சிகிச்சை மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்...

Meet Our Team



MiracleHealth

ஸ்காபுறோ நகரில்
3000 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2V1
என்னும் விலாசத்தில் இயங்குகின்றது.
( Scarborough General Hospital அருகில்)

Physiotherapy • Massage Therapy • Counselling • Ayurvedic Therapy • Acupuncture • IV Nutrition Therapy





We are accepting new patients.

தமிழிலும் உரையாடும் வசதிகள் உள்ளன.

Phone:
416.289.4444

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



Coverall Group Inc.

416-706-8160 OR 416-893-3216

Carefirst Family Health Team

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24



# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

- COMMERCIAL
- RESIDENTIAL
- VACANT LAND
- INDUSTRIAL
- CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · First National Financial LP · TD Canada Trust · Manulife · National Bank · Desjardins · RFA · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

# மாவீரத்தின் மகத்துவத்தை தமிழர் தேசம் உணர்த்தி நிற்கிறது

நவம்பர் 27 தமிழ் தேசிய மாவீரர்களை கூட்டாக நினைவு கூரும் நாள். ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக தம்முயிர்களை ஈந்த மானமா மறவர்களை எங்கள் தேசமே பூசிக்கின்ற அதியற்புத நாள். இந்த நாள் என்பது ஈழத்திலிருந்து உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களின் மனங்களில் ஈரத்தையும் வீரத்தையும் பிறப்பிக்கின்ற நாள். எனவே மாவீரர்களின் நினைவுகளுடன் ஈழத் தமிழ் மக்களாகிய நாம் எமது கடமைகளை வினைத்திறனுடன் நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற வலிமைமிகுந்த நாளாகவும் அமைகின்றது.

இம்முறை மாவீரர் நாளில் தமிழர் தேசம் என்றுமில்லாத வகையில் பேரெழுச்சியுடன் காணப்படுகின்றமை மாவீரர் பெற்றோர்களையும் உருத்துடையோரையும் பெருமிதம் கொள்ளவைக்கும். தமிழர் தேசம் எங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன் எங்கும் மாவீரர்களை நினைவுகூறுகின்ற பாடல்களின் ஒலி நம் வாழ்வுமீதும் மீண்டெழுதல்மீதும் கொண்டுள்ள மிகப்பெரிய நம்பிக்கையை உணர்த்துகின்றது.

நினைவுகூர்தல் என்பது உலகம் எங்கும் உள்ள மக்களின் அடிப்படை உரிமை. அது மக்களின் உணர்வு வெளிப்பாட்டின் ஆற்றுப்படுத்தல். ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நினைவேந்தல் என்பது பண்பாட்டு உரிமை. அதனை உலகம் முழுவதுமுள்ள எமது மக்கள் அனைத்துச் சமூகங்களுக்கும் உணர்த்தும் வகையில் நினைவேந்தலில் ஈடுபட்டுள்ளனர்.

உன்னத இலட்சியத்திற்காக தமது இளமையை, தமது வாழ்வை, தமது இன்பங்களைத் துறந்து களமாடி மாண்டவர்கள் மாவீரர்கள். தேசவிடுதலை ஒன்றே தங்கள் பெருஇலட்சியம் என்று மண்ணில் விதையான மாவீரர்களை பல இடர்பாடுகளின் மத்தியிலும் மக்கள் நினைவேந்தல் செய்வதுதான் மாவீரத்தின் மகத்துவமாகும்.

எங்கள் தேசத்தை, மக்களின் வாழ்வை வலுவூட்டும் பணிகளை இன்னமும் பேரேடுப்பில் செய்ய வேண்டும் என்ற உந்துதலை விதைக்கும் இப்புனித நாளில் ஆகுதியான எங்கள் உயிரிலும் மேலான மாவீரர்களுக்கு அகவணக்கத்தை செலுத்துகின்றேன்.

நிமால் விநாயகமூர்த்தி,
தலைவர்,
அனைத்துலகத் தமிழர் பேரவை.

# யாழ்ப்பாணத்தில் எலிக்காய்ச்சல் காரணமாக சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்

யாழ்ப்பாணத்தில், எலிக்காய்ச்சல் காரணமாக சிறுவன் ஒருவன் 26ம் திகதி அன்றையதினம் (26-11-2025) உயிரிழந்துள்ளான். அல்வாய் கிழக்கு, அல்வாய் பகுதியை சேர்ந்த பிரதீபன் டக்சிகன் (வயது 17) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,
கடந்த 22ஆம் திகதி இவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. காய்ச்சலை குணப்படுத்த தாயார் கை வைத்தியம் செய்துள்ளார். பின்னர் காய்ச்சல் வீரியமான நிலையில் 25ஆம் திகதி சிறுவனை மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக 26ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி 26ம் திகதி அன்றிரவு உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். எலிக்காய்ச்சல் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.



# இத்தாலியில் நடிகர் அஜித் குமாருக்கு ஜென்டில்மேன் ஓட்டுநர் விருது

உலக செய்திகள் World News

நடிகர் அஜித் குமாருக்கு "ஜென்டில்மேன் டிரைவர் ஆஃப் தி இயர் 2025" என்ற விருது வழங்கி, எஸ்ஆர்ஓ மோட்டார் ஸ்போர்ட் குழுமம் கவுரவித்துள்ளது. இத்தாலி வெனிஸ் நகரில் நடந்த விழாவில், அஜித் குமார் தனது குடும்பத்துடன் பங்கேற்று விருதை பெற்றுக்கொண்டார். தமிழ் படவுலகின் முன்னணி நடிகர் அஜித் குமார் சினிமாவை தாண்டி, தீவிர கார் பந்தய வீரராக இருக்கிறார். பல்வேறு நாடுகளில் நடந்த கார் பந்தயங்களில் தனது குழுவினருடன் இணைந்து பங்கேற்று வந்த அவர், சில பரிசுகளையும் வென்றுள்ளார்.

"அஜித் குமார் ரேஸிங்" என்ற கார் பந்தய நிறுவனத்தை அவர் நடத்தி வருகிறார். துபாய், பெல்ஜியம் உள்பட பல நாடுகளில் நடந்த கார் பந்தயங்களில் இந்த அணி பரிசுகளை வென்றுள்ளது. இந்நிலையில், கார் பந்தய வீரர் அஜித் குமாருக்கு இந்த ஆண்டின் ஜென்டில்மேன் ஓட்டுநர் என்ற விருது வழங்கப்பட்டது. இத்தாலியில் வழங்கப்பட்ட விருது குறித்து அஜித் குமாரின் மனைவியும், நடிகையுமான ஷாலினி வெளியிட்டுள்ள பதிவில், தொழில்முனைவோர், கார் ரேஸராக இருந்த பிலிப்பே சாரியோல் சார்பில் வெனிஸில் வழங்கப்படும் இந்த ஆண்டுக்கான ஜென்டில்மேன் ஓட்டுநர் விருது வென்ற எனது கணவரின் பக்கத்தில் நிற்பதற்காக பெருமைப்படு.

# உணவு பாதுகாப்பு அச்சுறுத்தலை தடுக்க வேண்டும் என ஜி20 மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி பேச்சு



ஜி-20 அமைப்பின் உச்சி மாநாடு தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்கஸ்பர்க் நகரில் நேற்று தொடங்கியது. இதில் பிரதமர் மோடி உள்பட பல்வேறு நாட்டு தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

மாநாட்டில் யாரையும் பின்தங்க வைக்காத வகையில் உள்ளடக்கிய மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பில் நடந்த முதல் அமர்வில் பிரதமர் மோடி பேசினார்.

பின்னர் நடந்த 2-வது அமர்வில் பிரதமர் மோடி பேசியதாவது: இயற்கை பேரழிவுகள் மனிதகுலத்திற்கு தொடர்ந்து குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளன. இந்த ஆண்டும், இயற்கை பேரழிவுகள் உலகம் முழுவதும் பெரும் மக்களை பாதித்துள்ளன. இது இயற்கை பேரழிவுகளை நிவர்த்தி செய்ய உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டிய அவசியத்தை தெளிவாக காட்டுகிறது.

பேரிடர் மீள்தன்மைக்கான நமது அணுகுமுறை வளர்ச்சி மையமாக இருக்க வேண்டும். எனவே பேரிடர் மீள்தன்மை உள்கட்டமைப்புக்கான கூட்டணியை நிறுவ வேண்டும். இதனுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் ஜி-20 நாடுகள் நிதி, தொழில்நுட்பம் மற்றும் திறன்களைத் திரட்டி, மீள் தன்மை கொண்ட எதிர்காலத்தை உறுதி செய்ய முடியும். விண்வெளி தொழில்நுட்பம் அனைத்து மனிதகுலத்திற்கும் பயனளிக்க வேண்டும் என்று இந்தியாவும் நம்புகிறது. எனவே இந்தியா ஜி-20 திறந்த செயற்கைக்கோள் தரவு கூட்டாண்மையை முன்மொழிகிறது.

காலநிலை மாற்றம் மற்றும் பிற சவால்கள் காரணமாக, நமது விவசாயத்துறை, உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் மிகவும் கடுமையாகி வருகிறது. எனவே இதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பல நாடுகளில் விவசாயிகள் உரங்கள், தொழில்நுட்பம், கடன், காப்பீடு மற்றும் சந்தை அணுகல் ஆகியவற்றில் அதிகரித்து வரும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்த சவால்களை எதிர்கொள்ள இந்தியா தனது சொந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில் உலகின் மிகப்பெரிய உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து ஆதரவு திட்டத்தை நாங்கள் நடத்துகிறோம். இந்தியா உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டத்தையும் மிகப்பெ20 நாடுகள் ஊட்டச்சத்து, பொது சுகாதாரம், நிலையான விவசாயம் மற்றும் பேரிடர் தயார்நிலையை ஒருங்கிணைக்கும் விரிவான உத்திகளை ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறு மோடி பேசினார்.



# கடாரம் கொண்டான் ராஜேந்திர சோழனின் 1000வது வெற்றிக் கொண்டாட்டம் கம்போடியா அங்கோர்வாட் நகரில் 22ம் 23ம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது



(கம்போடியா தேசத்தின் அங்கோர்வாட் நகரிலிருந்து லோகன் லோகேந்திரலிங்கம்)

அங்கோர் தமிழ்ச் சங்கம் மற்றும் சீனு ஞானம் ட்ராவல்ஸ் நிறுவனம் மற்றும் சவுத் ஈஸ்ட் ஆசியா பல்கலைக் கழகம் ஆகிவற்றின் இணைந்த ஏற்பாட்டிலும் சிந்தனையிலும் திட்டமிடப்பெற்ற “கடாரம் கொண்டான்” ராஜேந்திர சோழன் பெருவீரனின் 1000வது வெற்றிக் கொண்டாட்டம் கம்போடியா தேசத்தின் அங்கோர்வாட் நகரில் 22-11-2025 அன்று திகதி சனிக்கிழமை காலை கோலாகலமாக ஆரம்பமாகியது.

மேற்படி இரண்டுநாள் கொண்டாட்டத்தின் முதல்நாள் அங்குரார்ப்பண நிகழ்வில் பார்வையாளனர்களும் அறிஞர்களும் தமிழக அரசியல் தலைவர்களும் ஊடகவியலாளர்களும் இரண்டுநாட் கொண்டாட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் க.சோ. கண்ணன் மற்றும் கொங்கு ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு பயனுள்ள உரைகளை ஆற்றினார்கள்.

அந்த அற்புதமான மேடையில் கனடாவின் மத்திய பாராளுமன்றம் மற்றும் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றம் ஆகியவற்றின் சார்பாக விழா ஏற்பாட்டாளர்களுக்கு வழங்கப்பெற்ற அரச பாராட்டுச் சான்றிதழ்களை கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களோடு இணைந்து வழங்னார்கள். அத்துடன் கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் வழங்கப்பெற்ற பாராட்டுக் கேடயத்தை உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களான கனடாவாழ் திருவாளர்கள் மோகன் பாலசுப்பிரமணியம் மற்றும் ராம்சங்கர் சிவநாதன் ஆகியோர் வழங்கினர்.

பேச்சாளர்களாக மலேசியத் திருநாட்டின் முன்னாள் சுகாதார அமைச்சர் சுமணியம் அவர்கள் மற்றும் தமிழ்நாட்டின் தொல்லியல் நிபுணர் பெரியார் தெய்வநாயகம், உலகத் திருக்குறள் கூட்டமைப்பின் தலைவர் அரிமா மு.ஞானமூர்த்தி ஆகியோர் மற்றும் பல அறிஞர்களும் உட்பட கலந்து கொண்டு கடாரம் கொண்டான் ராஜேந்திர சோழன் பெருவீரனின் பெருமைகளை எடுத்துரைத்தார்கள். உலகின் பல நாடுகளிலுமிருந்து ஆர்வத்துடன் கலந்து கொண்ட பல தமிழ் அறிஞர்களும் “கடாரம் கொண்டான்” ராஜேந்திர சோழன் பெருவீரனின் வீரத்தையும் வியக்கத்தகு ஆற்றலையும் விபரித்து உரையாற்றினார்கள்.

கம்போடிய தேசத்தின் மரபு சார்ந்த நாட்டியம் மற்றும் பரத நாட்டியம் ஆகியவையும் சபையோரால் பாராட்டப்பெற்றன.








கலைஇலக்கியவாதிகளும சமூக செயற்பாட்டாளர்களும உள்ளடங்கிய சுமார் 400 பேர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த மாநாட்டை இங்கு சிறப்பாக நடத்துவதற்கு அங்கோர் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய தங்கவேலு சிறினிவாச ராவ் - ராஜசேகரன் ஞானசேகர் மற்றும தாமரை சிறினிவாச ராவ் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தார்கள். அவர்களோடு மாணிக்கம் சதாசிவம் மற்றும் முருகேசன் ஞானமூர்த்தி மற்றும் திருமதி. தாமரை சீனிவாசராவ் ஆகிய மூவரும் இணைப்பாளர்களாக இருந்து செயற்பட்டாளர்கள். மேற்படி























# 27ம் திகதி மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் கடைகளை 2 மணியுடன் மூடும்படி முன்வைக்கப்பட்ட கோரிக்கை?

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண. மாநகரசபை உறுப்பினர்களுக்கும், யாழ்ப்பாணம். வணிகர் கழக பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று 26ம் திகதியன்று இடம்பெற்றது.

எதிர்வரும் 27 திகதி எமது மண்ணுக்காய் மரணித்த வீரர்களின் தினமான மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களை மாலை 2.00 மணியுடன் பூட்டி உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் மாவீரர் நிகழ்வில் பங்கு பற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நேரில் சந்தித்து கோரிக்கை எழுத்துமூலமாக கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அவர்கள் அது குறித்து சாதகமாக பரிசீலிப்பதாக வாக்குறுதி தந்திருப்பதாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் இரத்தினம் சதீஸ் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மண்ணாம் வட்டுக்கோட்டையிலிருந்து கிடைத்த அதிர்ச்சிச் செய்தி!

## போதைக்கு அடிமையான பலருக்கு புனர்வாழ்வு!

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்ட 07 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 10 நாட்களுக்குள், போதைப் பழக்கத்திற்கு அடிமையான 08 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் ஏழுபேர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானமை உறுதியானது. இந்நிலையில் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை 07 பேர் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# தேசிய தலைவர் கொல்லப்பட வேண்டும் என்று விரும்பிய தமிழரசு கட்சி மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்படும்

## ஈழதமிழர் முன்னணி கட்சி தலைவர் எஸ்.ஜெயா சரவணா தெரிவிப்பு




தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கி சம்பந்தனை தமிழர்களின் தலைவராக்கி பாராளுமன்றத்துக்கு அனுப்பி அழகு பார்த்த தேசிய தலைவரை கொல்லுமாறு சொன்ன சம்பந்தன் ஒரு நயவஞ்சகர். எனவே அவரைக் கொல்ல சொன்ன தமிழரசு கட்சி இந்த மண்ணில் இருக்க கூடாது அவ்வாறு இரா. சாணக்கியன் கிழக்கு மண்ணில் இருந்து எம். சுமந்திரன் கட்சியில் இருந்து விரட்டி அடிக்கப்படுவார்கள் இதற்காகவே கட்சி செயல்படும் என ஈழ தமிழர் முன்னணி கட்சி தலைவர் அன்பின் இல்லம் அறக்கட்டளை தலைவருமான எஸ். ஜெயா சரவணா தெரிவித்தார்.

மட்டக்களப்பு கிரானில் புதிய கட்சியான ஈழதமிழர் முன்னணி கட்சி மற்றும் அன்பின் இல்லம் அறக்கட்டளை காரியாலய திறப்பு விழாவும் கட்சி அங்குராப்பணம் ஞாயிற்றுக்கிழமை (23) சம்பிராய பூர்வமாக இடம்பெற்றது இதன்போது கட்சியின் தலைவர் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், அரசியல் என்பது ஒரு சொல்லாடல் அல்ல அது எமது வாழ்வை நிர்ணயிக்கும் ஒரு கூர்மையான ஆயுதம் அந்த ஆயுதத்தை எப்படி பயன்படுத்துகிறோம் என்பது எங்கள் கெட்டித்தனமாக இருக்கும்.

இந்த நிலையில் எமது தேசிய தலைவர் தங்களின் சுயநலத்துக்காக செயற்படுபவர்களின் கையில் கொடுத்த படியால் இன்று எமது முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் நடுத் தெருவில் நிற்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

2009 போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பிற்பாடு வன்னி மாவட்டத்தில் போராளிகள் மாவீரர் குடும்பங்கள் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை இனம் கண்டு அவர்களுக்கு உதவிகளை செய்து வந்தேன்.

அப்போது கிழக்கு மாகாண போராளிகளை இனம் கண்டு அவர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்காக கடந்த 4 வருடங்களுக்கு முன்னாள் கால் பதித்த போது எனக்கு கை கொடுத்தது கருணா அம்மான்.

எனவே கருணா அம்மானுடன் இருந்தவர் இப்போது புதிய கட்சி ஆரம்பித்து டீல் போடுகின்றார் என்பர் அது ஒரு டீல் அல்ல நான்கு வருடத்துக்கு முன்னர் போராளிகளுக்கு உதவிகளை வழங்க வேண்டும் என சொன்ன போது கருணா அம்மான் எனக்கு தைரியத்தை கொடுத்த போது அந்த நிகழ்ச்சி நிரலின் போது 100 போராளிகளுக்கு நான் அந்த உதவி செய்தேன் அவ்வாறே கடந்த வருடம் 70 போராளிகளுக்கு அதை செய்தேன்.

அதற்கு பின்னர் அவருடைய நிர்வாகம் சிலவற்றை இனம் கண்டு அந்த நிருவாகத்தில் என்னால் செயல்பட முடியாது என்பதற்காக அதில் இருந்து விலகினேன் அதன் பின்னால் ஒரு வருட உழைப்பின் பின்னர் இப்போது அதே மண்ணில் கட்சியையும் அறக்கட்டளையும் திறந்துள்ளேன்.

சர்வதேச அரங்கில் பயங்கரவாதிகளுடனான போராட்டம் என்ற போர்வையில் சர்வதேச உதவியுடன் 2009 ஆண்டு ராஜபக்ச அரசு முள்ளி வாய்க்காலில் எங்களை தோற்கடித்த போது தலைவர் இரும்பு ஆயுதத்தை மௌனித்து அறிவாயுதம் என்பதை ஏற்படுத்தினர்.

இந்த நிலையில் இப்போது பொழுது போக்கு அம்சங்கள் வாழ்க்கை முறைகள் மாறி வருவதால் மண்ணின் மீதும் மக்கள் மீதும் உள்ள பற்று குறைந்து செல்கிறது இதனை இனம் கண்டு மண்ணின் மீதான பற்றை ஊக்குவிக்க வேண்டும் அதற்கமைய அறிவாயுத போராட்டத்தை எங்கள் இளைஞர்களுக்கு கடத்த வேண்டும்.

ஆனால் இன்று தமிழ் தாயகமான வடக்கு கிழக்கு நிலை கேள்வி குறியாக இருக்கிறது இதற்கு காரணம் தமிழரசு கட்சி நம்ப வைத்து கழுத்தறுத்தது 2002ம் ஆண்டு தேசிய தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு விடுதலைப் புலிகளின் அரசியல் அமைப்பாக களமிறக்கப்பட்டது.

2009 ஆண்டு தலைவரால் ஆயுதங்கள் மௌனிக்கப் பட்ட போது முள்ளிவாய்க்காலில் மாண்ட அத்தனை போராளிகள் தலைவர் உட்பட அனைவரும் கடைசி நிமிடத்தில் நினைத்திருப்பார்கள் எங்கள் அரசியல் கட்சியை களமிறக்கி உள்ளோம் அவர்கள் எமது போராளிகள் மாவீரர் குடும்பங்கள் மற்றும் மக்களை நல்ல நிலைக்கு கொண்டு செல்வார்கள் என்ற நம்பிக்கையில் உயிரிழந்தனர். ஆனால் நடந்தது என்ன?

2009க்கு முன் நாங்கள் கற்று தெரிந்து கொண்ட பாடங்கள் மண் மக்கள், போர், கலாச்சாரம் போரை நடாத்துவதற்கு கட்டுகோப்பான அமைப்பு என்றால் என்ன? என அறிந்து கொண்டோம் ஆனால் 2009 பின் இனழிப்பு நிறுத்தப்பட்டு அந்த வலி குறையும் முன்னரே வடகிழக்கு பூராகவும் போதை பொருள் கலாச்சாரம் பரப்பப்பட்டது மத தலங்கள் நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்கள் கையகப்படுத்தப்பட்டதுடன் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்கள், பறிபோயுள்ளன.

இவைகள் 2009க் முன்னர் நடைபெறவில்லை ஆனால் இவைகள் 2009 பின்னர் தான் நடக்கின்றது 25 வருடத்தின் பின்னர் தமிழ் இனம் என்ற ஒன்று இருக்கவே இருக்காது கொழும்பில் தமிழர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் அவ்வாறு பத்துடன் பதினொன்றாக இருக்க வேண்டிவரும்.

எங்களுக்கான கலாச்சாரம் விழுமியம் இருக்காது. இதற்கு எல்லாம் காரணம் இந்த தமிழரசு கட்சி 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்கள் யுத்தம் முடிந்த பின் போராளிகளின் நிலையை நினைத்தார்களா? அவர்களை ஒரு வழிப்படுத்தாமல் இருந்துள்ளனர்.

தலைவர் செத்தால்தான் நீங்கள் உயிருடன் இருக்கலாம் என சொன்ன சம்மந்தனின் கட்சியான தமிழரசு கட்சி இந்த நாட்டிலே இருக்க கூடாது அதற்கு என்னுடைய உயிர் இருக்கும் வரை விடமாட்டேன். இரா.சாணக்கியன் எம்.சுமந்திரன் கட்சியில் இருந்து விரட்டப்பட்டு தேசியம் சார்ந்தவர்கள் இந்த கட்சியை எடுத்து நடத்த வேண்டும்.

இந்த நயவஞ்சகர்கள் கூட்டத்தை இந்த மண்ணில் இருந்து விரட்ட வேண்டும் அதற்கு தேர்தெடுத்த பிரதேசம் வீரம் நிறைந்த இந்த கிரான் மண்ணில் சத்தியம் செய்து தமிழர கட்சியை ஓடும்வரைக்கு விரட்டுவேன் இல்லாவிட்டால் அன்றுடன் நான் உயிரை விடுவேன்.

ஆயிரம் குற்றச்சாட்டு தெரிவிக்கலாம் ஆனால் விடுதலைப் புலிகள் இருந்திருந்தால் நாங்கள் நல்லாக இருந்திருப்போம் என நினைப்பீர்கள் தலைவர் அழிந்து போக வேண்டும் என அப்போது இருந்த 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து தொலைபேசியை நிறுத்திவிட்டு ஒடி ஒழித்தனர். இப்போது வெள்ளை வேட்டியை போட்டுக் கொண்டு திரிகிற இவர்கள் தேவைதானா?

எனவே எங்கள் கட்சி இந்த தமிழரசு கட்சி அழிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்றார்.


TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY


| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


# நமது தேசத் தந்தை

**துணிச்சல், தியாகம், சுதந்திர உணர்வு ஆகியவற்றின் அழியாத சின்னம்**

துணிச்சலின் உயிர் வடிவாய் நீ,
அசைக்க முடியா மன உறுதியின் உருவம் நீ,
தியாகம் என்ற சொல்லுக்கே உயிர் கொடுத்த
உயரிய சத்தியத்தின் நிழல் நீ.




சுதந்திரம் எனும் கனவிற்கு
உயிர் மூச்சாய் நிலைத்த வழிகாட்டி,
இனம் காக்கும் அரிய தீபமாக
இதயத்தில் ஏற்றம் பெற்ற ஒளி நீ.

வஞ்சகம் அறியாத நேர்மை,
மண்டியிடாத மானம்,
தலை குனியாத தைரியம் -
அனைத்தும் உன் அடையாளம்.

பயம் அறியா பாதையில்
நீதியின் வழி நடந்தாய்,
அடிமைச் சங்கிலி உடைக்க
ஆத்தும சக்தி ஏந்தினாய்.

நமது தேசத்தின் அடையாளமாக,
நம்பிக்கையின் தூணாக,
தலைமுறைகள் தழுவும்
நிரந்தர வரலாறாய் நிற்கின்றாய்.

துணிச்சல், தியாகம், சுதந்திரம் -
இந்த மூன்றின் ஒருமித்த உருவமே நீ,
நமது தேசத் தந்தை,
தமிழரின் மறையாத பெருமை நீ.

- எழுதியவர் "ஈழத்து நிலவன்" -
26-11-2025

# சஜித்தை காட்டிக் கொடுத்த திருமலை "திடீர் புத்தர்"




**"ஜனநாயகம், சமத்துவம், சமஉரிமை இனநல்லுறவு, மதப் புரிந்துணர்வு என்ற முகமூடிகளுடன் இருந்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசவினதும் அவரது தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினதும் முகமூடிகளை கிழித்து சஜித் பிரேமதாச ஒரு கடும் இனவாதி, அவரது கட்சியின் கொள்கையும் இனவாதம்தான் என்பதனை புத்த பெருமான் தமிழ் மக்களுக்கும் சஜித் பிரேமதாசாவை மீட்பராக வணங்கும் இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் மீண்டும் புரிய வைத்துள்ளார்."**

**--------------------------------------------------------- கே.பாலா -**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில் இந்த அரசாங்கத்தில் ஏற்பட்ட புத்த பெருமானின் முதல் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக திருகோணமலை சம்புத்தி ஜயந்த விகாரை புத்தர் சிலை பிரதிஷ்டை இடம்பெற்று இனவாத ஆக்கிரமிப்பாக அது இடம்பிடித்த நிலையில் இவ்விடயத்தில் பேரினவாதிகளிடம் அடிபணிந்தமை இந்த அரசாங்கத்துக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கறுப்பு புள்ளியாக அமைந்தாலும் இந்த ஆக்கிரமிப்பின் மூலம் தமிழ் மக்களை "இனவாதமற்றவர்கள் என்ற முகமூடி" அணிந்து ஏமாற்றிவந்த சிலர் "இரத்தத்தில் இனவாதம் கலந்தவர்கள்" என்பதனை வெளிப்படுத்தி அவர்களின் முகமூடியை புத்த பெருமான் கிழித்து விட்டார்.

திருகோணமலை சம்புத்தி ஜயந்த விகாரைப் பகுதியில் சட்டவிரோத "ரெஸ்ரோரண்ட்" ஒன்றை அகற்றும் அரச அதிகாரிகளின் நடவடிக்கையை தடுக்க இரவோடிரவாக சட்டவிரோதமாக புத்தர் சிலையை பிரதிஷ்டை செய்ய முயன்ற பிக்குகளினால் அப்பகுதியில் ஏற்பட்ட களேபரமும் அதன் தொடர்ச்சியாக அதனை சிங்கள - தமிழ் இன முறுகலாக, கலவரமாக மாற்றி அநுர குமார அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட விருந்த சதியும் தவிர்க்கப்பட்டபோதும் இந்த சம்பவத்தில், இதுவரை காலமும் ஜனநாயகம், சமத்துவம், சமஉரிமை இனநல்லுறவு, மதப் புரிந்துணர்வு என்ற முகமூடிகளுடன் இருந்த பிரதான எதிர்கட்சியான முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மகனான சஜித் பிரேமதாசவினதும் அவரது தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினதும் முகமூடிகளை கிழித்து சஜித் பிரேமதாச ஒரு கடும் இனவாதி, அவரது கட்சியின் கொள்கையும் இனவாதம்தான் என்பதனை புத்த பெருமான் தமிழ் மக்களுக்கும் சஜித் பிரேமதாசாவை மீட்பராக வணங்கும் இலங்கை தமிழரசுக்கட்சிக்கும் மீண்டும் புரிய வைத்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட்ட சஜித் பிரேமதாச வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமோக வெற்றி பெற்றார். அவர் யாழ் மாவட்டத்தில் 3,12,722 வாக்குகளையும் வன்னி மாவட்டத்தில் 1,74,739 வாக்குளையும் பெற்று வடக்கு மாகாணத்தில் அவர் மொத்தமாக 4,87,461 வாக்குகளை தனதாக்கிக் கொண்டார். 2024 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித்தேர்தலில் கூட தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட அநுரகுமாரவையும் தமிழரசு தவிர்ந்த ஏனைய தமிழ் தேசியக்கட்சிகளினால் தமிழ் பொதுவேட்பாளராக களமிறக்கப்பட்ட அரியநேத்திரனையும் எதிர்த்து களமிறங்கிய சஜித் பிரேமதாச அப்போதுகூட வடக்கில் மட்டும் 2,16,599. வாக்குகளை ப்பெற்றார். இவ்வாறு இனவாதத்தை இரத்தத்தில் வைத்துக்கொண்டு இன நல்லிணக்கத்தை வாயில் மட்டும் வைத்து தமிழ் மக்களை தமிழரசுக்கட்சியோடு இணைந்து ஏமாற்றிய சஜித் பிரேமதாசாவினதும் அவரின் கட்சியினதும் இனவாத முகம் தற்போது அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது.

சஜித் பிரேமதாச ஒன்றும் இனவாதம் துறந்த உத்தமர் அல்ல. 2019ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிட்ட அவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு, கிழக்கு உட்பட, 1000 விகாரைகள் கட்டுவேன் என சிங்கள மக்களுக்கு உறுதியளித்திருந்தார். 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலின் போதும் அந்த உறுதிமொழியை மீண்டும் வழங்கினார். அவ்வாறான சஜீத் பிரேமதாசாவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை சுமந்திரனின் தனிப்பட்ட முடிவில் தமிழரசுக்கட்சி வழங்கியது அதுவும் முதல் தேர்தலில் வழங்கியதைக்கூட ஓரளவுக்கு நியாயப்படுத்தக்கூடியதாக இருந்தாலும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய தமிழ் தேசியக்கட்சிகளினால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்ட நிலையில் கூட அவருக்கு எதிராக பகிரங்கமாகவே தமிழரசுக்கட்சி பிரசாரம் செய்ததுடன் சஜித் பிரேமதாசவை ஆதரிக்குமாறும் வேண்டியது. ஆகவே தற்போது திருகோணமலையில் தோன்றிய திடீர் புத்தர் சஜித் தரப்பின் முகமூடியை மட்டுமன்றி தமிழரசிலுள்ள சிலரின் முகமூடிகளையும் கழற்றி விட்டுள்ளார்.

ஆரோக்கியமான மற்றும் முதிர்ச்சியடைந்த ஜனநாயகம் என்பது வெறும் ஆளும் கட்சியை மட்டுமல்ல, ஆளும் கட்சியின் தவறுகளைச் சுட்டிக்காட்டி, மாற்றுக் கொள்கைகளை முன்வைக்கும் ஒரு வலுவான, ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்க்கட்சியையும் சார்ந்துள்ளது. ஒரு நாட்டின் எதிர்க்கட்சி என்பது வெறும் கூட்டமோ, கோஷமோ அல்ல. அது ஆட்சியைக் கேள்வி கேட்கவும், தவறை திருத்தவும், தேவையான வேளைகளில் அதிகாரத்தை எதிர்கொள்ளவும், அதே சமயம் எல்லா இனங்கள், மதங்களின் கண்ணியத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கவும் கூடிய சக்தியாக இருக்க வேண்டும். அதன் வலிமை எண்ணிக்கையில் மட்டும் அல்ல, அதன் நிலைப்பாட்டு மதிப்புகளிலும் உள்ளது. எதிர்க்கட்சி என்பது ஒரு நாட்டில் அடுத்த அதிகாரத்தைத் தேடும் மக்களின் குழு. எனவே, அவர்கள் நிலவும் சமூக - அரசியல் நிலைமைகளைப் பற்றிய ஆழமான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். அனைத்து இனங்களையும் மதங்களையும் சமமாக மதிக்க வேண்டும் ஆனால் இலங்கையில் உள்ள தற்போதைய பிரதான எதிர்க்கட்சியிடம் இவ்வாறான பண்புகள் ஏதாவது உள்ளனவா என்றால் இல்லையென்பதனையே அண்மைய திருகோணமலை புத்தர் சிலை பிரதிஷ்டை நிரூபித்துள்ளது.

திருகோணமலை புத்தர் சிலை பிரதிஷ்டை விவகாரத்தில் பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி வெளிப்படையாகவே இனவாதத்தை கக்கியது. திருகோணமலை சம்புத்ஜயந்தி போதிராஜ விகாரையில் பௌத்த மதத்துடன் தொடர்புடைய சகல பணிகளையும் முன்னெடுக்கும் சுதந்திரம், உரிமை தேரர்கள் உள்ளிட்ட நிர்வாக சபையினருக்கு உள்ளது. இதனையே பின்பற்ற வேண்டும். அதில் தலையிட எவருக்கும் உரிமை கிடையாது என வெளிப்படையாகவே இனவாதத்தை கக்கினார் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச. நாட்டின் அரசியலமைப்புக்கமைய பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அத்துடன் பௌத்தசாசனத்தை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. பௌத்த மதத்திற்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்றார். அதனுடன் மட்டும் அவர் நின்று விடவில்லை. திருகோணமலையில் பௌத்த தேரர்களுக்கு நடந்த வேண்டத்தகாத செயற்பாடுகளுக்கு மன்னிப்பு கோருகின்றேன். மன்னிப்பு கோர வேண்டிய பொறுப்பானவர்களுக்கு அதை நிறைவேற்றுவதற்கு தேவையில்லாத போதிலும் பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எதிர்க்கட்சியானாலும் அதை நிறைவேற்றி வைக்கிறோம். பௌத்த மதத்துக்கு முன்னுரிமையளிப்பதோடு ஏனைய சமயத்தவர்களுக்கும் சமமான உரிமை அளிக்கப்பட வேண்டும். இவற்றில் பிரச்சினை ஏற்படுமானால் தேசிய பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

சஜித் பிரேமதாச இவ்வாறான இனவாதக் கருத்தை வெளிப்படுத்திய நிலையில் தான் அவரது கட்சி முக்கியஸ்தர்களும் அப்பட்டமாக இனவாதத்தை கக்கினர். ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான எம்.பி. சுஜீவ சேனசிங்க, "இது சிங்கள பௌத்த நாடு. ஏனைய மதங்களை ஆதரிப்பது சிங்கள பௌத்த கொள்கை. திருகோணமலை புத்தர் சிலை விடயத்தை பற்றி நாங்கள் பேசினால் தமிழ் அரசியல்வாதிகள் எம்முடன் முரண்படுவார்கள். ஆனால் நாம் பேசித்தான் ஆக வேண்டும் என்றார்.

இன்னொருவரான நளின் பண்டார எம்.பி. திருகோணமலை விடயத்தை மனதில் வைத்து "வடக்கு மாகாணத்தில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை ஒருபோதும் விடுவிக்க கூடாது. நாட்டில் மீண்டும் யுத்தம் ஒன்று தோற்றம் பெறாத வகையில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகள் முறையாக அடையாளப்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்ட பாதுகாப்பினை காட்டிலும் தேசிய பாதுகாப்பினை கருத்திற் கொண்டு காணி விடுவிப்பு குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும். யுத்தம் முடிவடைந்து விட்டது என்று குறிப்பிட முடியாது. எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று தோற்றம் பெறலாம். ஆகவே அவதானத்துடன் செயற்பட வேண்டும். வடக்கு மாகாணம் தேசிய பாதுகாப்பின் பிரதான கேந்திரமையாக காணப்படுகிறது. வடக்கில் காணி பிரச்சினை காணப்படுகிறது. தனிப்பட்ட பாதுகாப்பினை காட்டிலும் தேசிய பாதுகாப்பினை கருத்திற் கொண்டு காணி விடுவிப்பு குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும். தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை இராணுவத்தினர் வசம் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்நிலையில் திருகோணமலை புத்தர் சிலை விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கூறிய கருத்தை மீளப்பெற வேண்டும். தமிழ் மக்களிடம் அவர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் சஜித் வெற்றி பெற்றால் அனைத்து பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்கும் என்று எண்ணி தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்தார்கள். அந்த தமிழ் மக்களுக்கு சஜித் பிரேமதாச துரோகமிழைத்துள்ளார் என தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான சிவஞானம் சிறீதரன் பாராளுமன்றத்தில் வலியுறுத்திய நிலையில் மறுநாளே, தமிழ் தேசியத்தையும் தமிழ் தேசிய அரசியல்வாதிகளையும் இழிவுபடுத்திவரும் இராமநாதன் அர்ச்சுனா என்ற இனவாதிகளின் ஏவல் பேயை பயன்படுத்திய சஜித் பிரேமதாச கட்சியினர் சிறீதரன் மீது பொய்க்குற்றச் சாட்டுக்களை முன்வைக்க வைத்து பழிதீர்த்தனர். சஜித் கட்சியை சேர்ந்த சுஜீவ சேனசிங்க, தயாஸ்ரீ ஜெயசேகர ஆகியோரே இருந்தனர்.

ஆக மொத்தத்தில் திருகோணமலை சம்புத்தி ஜயந்த விகாரை பகுதியில் இரவோடிரவாக திடீரென குடியேறிய புத்தர், அநுரகுமார அரசும் பேரினவாதிகளுக்கு அடிபணிந்துதான் ஆக வேண்டும் என்பதையும் தமிழ் மக்கள் தொடர்ந்து ஆதரித்து வரும் சஜித் பிரேமதாசவும் அவரது கட்சியினரும் ஒன்றும் இனவாதம் துறந்த உத்தமர்கள் அல்லவென்பதையும் இவ்வாறான இனவாதிகளுக்குத்தான் தமிழ் பொது வேட்பாளரையும் எதிர்த்து தமிழரசுக்கட்சி ஜனாதிபதித்தேர்தலில் ஆதரவளித்தது என்பதையும் அநுரகுமார மட்டுமல்ல இந்த நாட்டில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அனைத்தையும் தீர்மானிப்பது பௌத்த மதத்தலைவர்களும் காவியுடைக்குள் மறைந்திருக்கும் இனவாதிகளான பிக்குகளும்தான் என்பதையும் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார். அந்த வகையில் இந்த அநுரகுமார அரசு மீதும் சஜித் பிரேமதாச மீதும் மோட்டுத்தனமான நம்பிக்கை வைத்திருக்கும் தமிழர்களுக்கு திருகோணமலை திடீர் புத்தர் உபதேசம் செய்திருப்பதற்கு ஒருவகையில் நன்றி சொல்ல வேண்டியும் உள்ளது.




# யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவி பரீட்சை மோசடியில் ஈடுபட்டமையால் தடை விதிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News

- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீட பரீட்சையில் மோசடி செய்த மாணவி ஒருவருக்கு ஒரு வருட தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட இறுதியாண்டு பரீட்சையில் தோற்றிய மாணவி தான் அணிந்திருந்த பரிதா ஆடையின் உள்ளே மறைத்து வைத்திருந்த கைத் தொலைபேசியின் ஊடாக பரீட்சை மோசடி செய்த குற்றத்திற்காகவே மாணவிக்கு ஒரு வருட தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்பட்ட ஒரு வருட காலத்தினுள் மாணவி பல்கலைக் கழக பரீட்சைகள் எவற்றிலும் தோற்ற முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முஸ்லீம் மாணவி தனது காலாசார உடையாக பரிதா அணிந்திருந்தபோது அதனை சாதகமாக பயன்படுத்தியே இந்த மோசடியில் ஈடுபட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என பல்கலைக் கழக வட்டாரங்களிலிருந்து பெறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் இந்த செய்தி உறுதி செய்யப்பெறுகின்றது.

# யாழ்ப்பாணம் "யாழ்க்கோ"விற்கு உலக வங்கி வழங்கிய 54 மில்லியன் ரூபா திருப்பிச் செல்லும் அவலததிற்கு யார் பொறுப்புக் கூறவேண்டும்?




- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் உள்ள யாழ்க்கோ நிறுவனத்திற்கு உலக வங்கி மானியமாக வழங்க முன்வந்த 54 மில்லியன் ரூபாவிற்கான திட்டத்தை நிறைவேற்ற முடியாது எனக்கூறி யாழ்கோ நிறுவனத்தின் தற்போதைய தலைவர் உள்ளிட்ட நிறுவனத்தினர் தெரிவித்ததால் பணம் திரும்பும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற உயர் மட்டக் கலந்துரையாடலில் "யாழ்க்கோ" தலைவர் காந்தகுமார் இதனைத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில், உலக வங்கி பிரதிநிதிகள், மாவட்ட அரச அதிபர், கால் நடை அமைச்சின் அதிகாரிகள், மாகாண கால் நடை அமைச்சு, இத் திட்டத்தை முதலில் திட்டமிட்டவர்கள் எனப் பல முக்கிய அதிகாரிகள் இருந்தபோதும் "யாழ்க்கோ" மறுத்தமையால் மாவட்ட அரச அதிபரும் பின் வாங்கும் நிலை ஏற்பட்டது அதன் காரணமாக பால் பதனிட்டு பொதி செய்யும் நிலையத்தின் கட்டிட அமைப்பின்கு உலக வங்கி இலவசமாக வழங்க முன் வந்த உலக வங்கி திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய நிறுவனமே மறுக்கும்போது பணத்தை வழங்க முடியாது எனக் கையை விரித்து விட்டனர்.

யாழ்ப்பாணத்தில் "யாழ்க்கோ" பால் பதனிடல் நிலையம் அமைத்தால் நாள் ஒன்றிற்கு 6 ஆயிரம் லீற்றர் பால் பொதியிட முடியும் இதன் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கே எடுத்துச் செல்லப்பட்டு பொதி செய்து மீண்டும் எடுத்து வரும் நிலை தடுக்கப்படும் என்பதோடு பால் சாதாரண கைகளாலும், இடத்திற்கு இடம் எடுத்துச் செல்லும்போது தரத்தில் குறை ஏற்படுவதும் குறைக்கப்படும் என திட்டமிட்ட அதிகாரிகள் விளக்கமளித்தபோதும் இவ்வாறான நிலையம் அமைந்தால் யாழ்க்கோவின் கீழ் தற்போது பால் சந்தைப்படுத்தல் நிலையங்களாக உள்ள 23 கிளை நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பெறும் எனவும் அறியப்பெறுகின்றது.



# கவிஞர் ஈரோடு தமிழன்பன் உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார்

## வானம்பாடி கவிதைச் சஞ்சிகை மூலம் 1975ம் ஆண்டு காலப் பகுதியில் பல ஈழத்துக் கவிஞர்களுக்கு உற்சாகம் அளித்து எழுதத் தூண்டிய பெருகவிஞர்!




ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை அவரது மறைவையொட்டி இரங்கல் கூட்டம் ஒன்றை 31-11-2025 அன்று ஈரோட்டில் நடத்துகின்றது எழுத்தாளரும், தமிழ் கவிஞருமான தமிழன்பன் சென்னையில் தனது 92வது வயதில் காலமானர். இவர், "வணக்கம் வள்ளுவ" நூலுக்காக 200ல் சாகித்ய அகாடமி விருது பெற்றார். மரபுக்கவிதை, புதுக்கவிதை, நாடகங்கள், குழந்தைகள் இலக்கியம் ஆகிய பல்வேறு படைப்புகளை எழுதியுள்ளார்.

பாரதிதாசன் மரபைச் சேர்ந்த தமிழன்பன், வானம்பாடி கவிதை இயக்கத்தின் முக்கிய பங்களிப்பாளர்களில் ஒருவர். அத்துடன் வானம்பாடி கவிதைச் சஞ்சிகையில் 1975ம் ஆண்டு காலத்தில் பல ஈழத்துக் கவிஞர்களுக்கு உற்சாகம் அளித்து எழுதத் தூண்டிய பெருகவிஞர் இவராவர். சினிமா துறை, செய்தித்துறைகளிலும் அனுபவம் பெற்றவர். தமிழக அரசின் அறிவியல் தமிழ் மன்றத்தின் உறுப்பினர் மற்றும் அரிமா நோக்கு என்ற ஆய்விதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

இந்த நிலையில், வயது மூப்பு காரணமாக ஈரோடு தமிழன்பன், 92, சில நாட்களுக்கு முன்னர் காலமானார். அவரது மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் உள்பட பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். தமிழக முதல்வர் ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டிலும் சிறந்து, தமிழுக்கு வளம் சேர்த்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்கிற ந. செகதீசன் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல், இவ்வா கூறியுள்ளார்.

அன்னாரின் மறைவையொட்டி ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பெற்றுள்ளது.

"கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்கிற ந.செகதீசன் அவர்கள் தனித்துவம் மிக்க பெரும் இலக்கியவாதியாவார். அவர் ஆரம்பத்தில் ஈரோடு மதரசா உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பின்னர் சென்னை புதுக் கல்லூரியில் பேராசிரியராகப் ஓய்வு பெற்றார். மறைந்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்கள் மரபுக் கவிதை, புதுக்கவிதை மற்றும் ஹைக்கூ கவிதை ஆகியவற்றில் புகுந்து படைப்பிலக்கியத் துறையின் உச்சத்தைத் தொட்டவரும் கூட" என்று ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

# குளிர் காலம்

## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---


குளிர்காலம் தொடங்கக் கூதலும் வந்தது
வளியுடன் குளிர்ச்சி வாட்டம் தந்தது
வெளியே செல்லவும் வீதியில் நடக்கவும்
வழியே இன்றி வாடிக் கிடந்தோம்.
கொட்டும் பனியைக் கூட்டித் தள்ளிட
சொட்டும் வியர்வை சூடாய் உடலிலே.!
பாட்டம் பாட்டமாய்ப் பொழியும் தூறலை
கூட்டிக் குவிக்கக் கடுப்பு வருமே.!
சிறுவருக் கெல்லாம் சிறுபனி குதூகலம்
அறுபது கடந்தோர்க் கதுவே அவலம்
விறுவிறு நடையாய் வேலைக்குச் சென்றோர்
சறுக்கி விழுந்து சஞ்சலம் கொண்டனர்.
புள்ளினம் எல்லாம் புகலிடம் தேடின
கள்ளமில் குழந்தைகள் கடும்நோய் கொண்டன
வெள்ளைக் காரரும் விரும்பும் காலமாம்
பிள்ளை ஜேசு பிறந்தநாள் வருவதால்.
மொட்டை மரமெலாம் முகிழ்ந்தன பனிப்பூ
வெட்டை வெளியெலாம் விரிந்தன வெண்பாய்
கொட்டும் பனிதான் குலப்பன் தந்தாலும்
கட்டாயம் செல்வோம் கழகமாம் மூத்தோர்
வருடம் ஒருமுறை வருகிற சீதளம்
தெருவெலாம் சிதைந்துச் சேதம் அடைந்திடும்
இரும்பு விளைய ஏற்ற காலமாம்
விரும்பும் கனடா வீழ்ந்திடும் பனியையே!

---

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1174

## (வரலாறும் மரபும்)

## சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில்

### உடுப்பிட்டி

நோய்நீங்கி நலம்பெறவிரும்பிய சந்திரசேகர மாப்பாணமுதலியார், தனது மனைவி பார்வதி மற்றும் புதல்வர்களாகிய தனபாலசிங்கம், குணபாலசிங்கம், பரம்பரைப் புரோகிதர், காசிப்பிராமணர் கோபாலக்குருக்கள் ஆகியோருடன் 1365 ஆம் ஆண்டு நாகப்பட்டினத் திலிருந்து புறப்பட்டு, யாழ்ப்பாணத்திலுள்ள வீரமாகாளியம்மன் துறையிலே வந்திறங்கினார். கீரிமலையை நோக்கிப் புறப்பட்ட சந்திரசேகரனும் ஏனையோரும், மேற்கே செல்வதற்குப் பதிலாகத் தென்திசையை நோக்கி நகர்ந்த காரணத்தால், அவர்கள் உடுப்பிட்டியை வந்தடைந்தனர்.

உடுப்பிட்டியில் இவர்கள் தங்கிய இடத்திலே ஒரு குளமும், காய்த்துக் குலுங்கிய மாமரமும் இருப்பதைக் கண்டு அவ்விடத்திலேயே தங்கினர். இவ்விடமே முருகன் பரிவார மூர்த்தியாக இப்பொழுது எழுந்தருளியுள்ள இடமாகும். இக்குளத்திலே சந்திரசேகரமாப்பாண முதலியார் தினமும் நீராடி வந்தார். இதன் பயனாகத் தீராத நோயாக விளங்கிய நோய் மாறி உடல்நலம் பெற்றார். தனது நோய் மாறியமைக்குத் தான் தங்கியிருந்த தலமே காரணம் என உணர்ந்தார். தான் தங்கியிருந்த இடத்திலே தனது குலதெய்வமான வீரபத்திரசுவாமிக்குக் கோயில் அமைக்க ஆவல் கொண்டார். தற்போது வீரபத்திசுவாமி கோயிலுள்ள இடத்திலே கோவிலைக் கட்டி, தான் சுகம் பெறக் காரணமாயிருந்த திருக்குளத்தையும் புனரமைத்துச் சந்திரக்குளம் எனப் பெயரிட்டார். தான் அழைத்து வந்த கோபாலக்குருக்களையும், மூத்தமகன் தனபாலசிங்கத்தையும் உடுப்பிட்டியில் விட்டு, ஏனையோருடன் தாய் நாடு திரும்பினார். இச்சம்பவங்களை உறுதி செய்வது போல வீரபத்திரசுவாமிகோயில் நிறுவப்பட்ட காணி, பண்டாரத்தோட்டம் என அழைக்கப்படுகின்றது.

சந்திரசேகர மாப்பாணமுதலியாரின் சந்ததியினர், இவ்வூரில் பிரபல்யம்பெற்று வாழ்ந்துள்ளனர். இரண்டாவது சந்திரசேகர மாப்பாண முதலியாரின் மகன் வீரகத்தி மணியகாரன். இவரது இரண்டாவது குமாரராகிய கதிர்காம உடையார் என்பவரால், கி.பி 1851 ஆம் ஆண்டு, வீரபத்திரசுவாமி கோயில் புனரமைக்கப்பட்டு, கோயிலைச் சுற்றிச் சுற்று மதில் எழுப்பப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெற்றது. அத்தோடு கதிர்காம உடையார் தனது ஆதனங்களையும் கோயிலுக்குத் தர்மசாசனம் செய்து வைத்தார். இவ்வாண்டிலிருந்து இக் கோயிலில் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. கோவில் பரிபாலனம் சிறப்பாக நடைபெற கதிர்காமஉடையாரின் சந்ததியினர், நூற்றுக்குமேற்பட்ட பரப்பு ஆதனங்களை இக் கோயிலுக்கு தர்மசாசனம் செய்துள்ளனர்.

இக்கோயில் காலத்திற்குக் காலம் புனரமைக்கப்பட்டு, பல தடவைகள் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. சிவாகமங்கள் கூறும் கிரியைகளிலே கும்பாபிஷேகம் முதன்மை பெறுகின்றது. இத்தகைய மகா கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு தடவை நடைபெறுவதால், ஏனைய வழிபாடுகள், மகோற்சவங்களை விடச் சிறப்பானதாக எண்ணப்படுகின்றது. பழுதடைந்த கோயிலைத் திருப்பணிகள் மூலம் புதுப்பித்து, அக்கோயிலில் எழுந்தருளியுள்ள மூர்த்திக்கு நிகழ்வதே புனருத்தாரண கும்பாபிஷேகம் எனப்படும்.

இவ்வூரில் கதிர்காம உடையாரின் சந்ததியினர் மிகச் செல்வாக்குடன் விளங்கியதோடு, சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயில் திருப்பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளனர். கி.பி 1874 ஆம் ஆண்டு, கதிர்காம உடையாரின் மகனான குமார் என்பவராலும், கி.பி 1897 இல் கதிர்காம உடையாரின் பேரனாகிய குமார் செல்லப்பா என்பவராலும், மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. இதன்பின்னர் 1922 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, நிற்சிங்கர் வீரகத்திப்பிள்ளை என்பவராலும், இவரது மகனான சின்னத்துரை எனபவராலும், வெள்ளைக்கல் திருப்பணி வேலைகள் செய்யப்பட்டு, 1943 ஆம் ஆண்டு, மீண்டும் மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து சகல விழாக்களும் வீரபத்திர சுவாமி கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மீண்டும் திரு.வீ. சின்னத்துரை என்பவரால், 1957 ஆம் ஆண்டு இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1979 ஆம் ஆண்டு திரு. அ.சி. குமாரசாமியாலும் இவரின் சகோதரர்களாலும் கும்பாபி'கம் நிறைவேற்றப்பட்டது. எனினும், இக்கோயில் 1960, 1970 களில் எவ்வித பராமரிப்புமின்றிச் சீர்குலைந்து காணப்பட்டது. வீரபத்திரசுவாமி மீது ஆறராத பக்தி கொண்ட இவ்வூர்மக்கள், இந்நிலை கண்டு மனம் வருந்தினர். இதன் வெளிப்பாடாக 1970 களின் பிற்பகுதியில், பத்துப்பேர் கொண்ட சபையொன்று அமைக்கப்பட்டு, கோயிலை நல்லநிலைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இக்கோயிலை நிர்வகிக்க ஏதுவாக, தர்மகர்த்தாசபையொன்றை உடுப்பிட்டி மக்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கினர். இத் தர்மகர்த்தாசபை, கோயிலைப் புனர்நிர்மாணம் செய்ய உரிய திட்டங்களை வகுத்துச் செயற்பட்டது. அத்தோடு கோயிலோடு இணைந்த பல பணிகளையும் நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. இதன் முதற் கட்டமாக, 1981 ஆம் ஆண்டு முதல் நவராத்திரிவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பண்ணிசை, சமயப்போட்டிகள் ஆகியவற்றை நடத்தி, மாணவர்களை ஊக்குவித்தனர். சைவப்பெரியார்களை அழைத்து மகாபாரதம், இராமாயணம் மற்றும் சமயச் சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து, இக்கோயில் மூலம் சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். அத்தோடு கோயில் விழாக்கள், பூசைகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற வாய்ப்பேற்பட்டது.

இவ்வாறான மாற்றங்களினால் உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திரசுவாமி கோயிலும், இவ்வூர் மக்களும் புதுப்பொலிவு பெற்றனர் என்பது சாலவும் பொருந்தும். இவ்வாறன நிர்வாக மாற்றத்தினைக் கொண்டுவரப் பலரின் பங்களிப்பு உதவியுள்ளது. இவர்களுள் திருவாளர்கள் வே.சின்னத்தம்பி, க.செல்லையா, வே.கந்தசாமி, சி.கந்தசாமி, க.ஆறுமுகம், இ.இராசரத்தினம், வே.செல்வரத்தினம், சி.ஆனந்தசிவம், சி.முத்துக்குமாரு ஆகியோருடன் செல்வி. சீதா வேலுப்பிள்ளை இவர்களோடு சேர்ந்து சேவையாற்றிய சி.அழகையா, இ.பஞ்சநாதன், சி.கார்த்திகேசு, பொ.வேலாயுதம், ந.பாலசிங்கம், செ.சிவகுரு, ஆகியோரின் பணி என்றும் நினைவுகூரத்தக்கது.

*வளரும்..*



# இலங்கையின் பாதுகாப்பு அமைச்சை தமிழ் மக்கள் முற்றாக வெறுக்கும் ஒரு அமைச்சாகவே நான் பார்க்கின்றேன்

இலங்கை செய்திகள் Sri Lanka News

- பாதுகாப்பு அமைச்சு மீதான



## விவாதத்தில் பாராளுமன்றத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி ஆற்றிய தெரிவிப்பு

இப்போது இரண்டு அமைச்சுக்களான பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் கீழ் நான் தெரிவிக்கும் கருத்துக்களை இரண்டு விதமான வழிகளில் நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.

மதிப்பிற்குரிய தலைமை உறுப்பினரே!

நீங்கள் இதை ஆக்கப்பூர்வமான முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும். உண்மையான பிரச்சினைகள் என்று சில பிரச்சினைகளை நாங்கள் பட்டியலிடுகிறோம். அவை இந்த நாட்டின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். நீங்கள் அவற்றைக் கவனிக்கவில்லையென்றால் - நாட்டின் அந்தப் பிரிவினருடன் இந்த நாட்டின் சட்டபூர்வமான தன்மை குறித்து ஒரு பிரச்சினை எழும்.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கங்கள் கவனித்து அவற்றைச் சரிசெய்யும் என்று எதிர்பார்க்கக் கூடிய சில பிரச்சினைகளை நாங்கள் எழுப்புகிறோம். ஏனென்றால் அவை இந்த நாட்டின் சட்டபூர்வமான தன்மையின் மையத்திற்குச் செல்கின்றன. எனவே - தமிழ் மக்கள் ஆக்கப்பூர்வமாக இருக்க முயற்சிக்கும் விதத்தில் நீங்கள் அதை எடுத்துக் கொள்ளவேண்டும். இது இயற்கையாகவே ஒரு உணர்ச்சிபூர்வமான விடயமாகும். ஆனால் நீங்கள் அந்த உணர்ச்சிகளை எல்லாம் விட்டுவிட்டு அதை நேர்மறையான வழியில் எடுத்துக் கொண்டால் அல்லது முழுமையாக மறுத்து - தமிழர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்றும் தமிழர்கள் இலங்கையை அழிக்க விரும்புபவர்கள் என்றும் நீங்கள் தமிழர்கள் மீது பழி சுமத்தவும்கூடும். எனவே இந்த இரண்டு வழிகளில் ஏதேனும் ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம். ஆனால் நான் சொல்ல வேண்டும் என்று நம்புவதை நான் கூறப் போகிறேன்.

மாண்புமிகு தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே!

நான் நேர்மையாகச் சொன்னால் - இப்போது பாதுகாப்பு அமைச்சை எடுத்துக் கொண்டால் - தமிழ் மக்களைப் பொறுத்தவரை - அது முற்றாக வெறுக்கப்படும் அமைச்சாகும். இந்த அரசாங்கத்தின் கீழ் மட்டுமல்ல - முந்தைய அரசாங்கங்களின் கீழும் கூட வெறுக்கப்படும் அமைச்சாகும். அரச கட்டமைப்பின் கீழ் மிகவும் வெறுக்கப்பட்ட அமைச்சாக இது ஏன் உள்ளது? ஏனென்றால் அந்த அமைச்சே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து துன்பங்களுக்கும் காரணமாகும். போரின் போது மட்டுமல்ல - போருக்குப் பின்னரான 16 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இத்தகைய நிலையே இந்த அமைச்சின் கீழ் உள்ளது. எனவே நீங்கள் இந்த விடயங்கள் தொடர்பாக என்ன செய்யப் போகிறீர்கள்?

கௌரவ பாதுகாப்பு துணை அமைச்சர் தனது தொடக்க உரையில் வடக்கு கிழக்கில் போதைப்பொருள் பரப்புவதில் இராணுவத்தின் ஈடுபாடு குறித்து நான் முன்பு கூறிய சில கருத்துக்களைக் குறிப்பிட்டார். நான் சொன்னதில் நான் உறுதியாகவே இருக்கிறேன்.

கௌரவ துணை பாதுகாப்பு அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு வந்து யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களில் கலந்து கொண்டால் அவர் இதனைப் பற்றி அறிந்து கொள்வார். ஜனாதிபதிகளால் நியமிக்கப்படும் ஆளுநர்கள் முதல் - இராணுவ அதிகாரிகள் அங்கே இருப்பார்கள். யாழ்ப்பாண கட்டளை தளபதி அங்கே இருப்பார். இவை பற்றி பேசப்படும்போது - காவல்துறையும் இராணுவமும் கைகோர்த்து செயல்படுகின்றன என்பதை நான் மட்டுமல்ல அனைவருமே ஒப்புக்கொள்வார்கள். போதைப்பொருள் பரப்புதல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் வரும்போது - போதைப்பொருள் விற்பனையாளர்களாகக் கண்டுபிடிக்கப்பட்ட அனைவரும் - மக்களால் துரத்தப்படும்போது அவர்கள் இராணுவ முகாம்களுக்குள் சென்று ஒளிந்து கொள்கிறார்கள்.

பின்னர் மக்கள் காவல்துறையிடம் முறைப்பாடு அளிக்க முயற்சிக்கும்போது - காவல்துறையினர் முறைப்பாடுகளை ஏற்க மறுக்கிறார்கள் என்பதே அனைவரதும் குற்றச்சாட்டாக உள்ளது. அதன் பிறகு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சென்று காவல்துறையினர் புகார்களை ஏற்க மறுப்பதாகவும் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்கள். அதுதான் உண்மை. இப்போது நீங்கள் விரும்பினால் அதை மறுக்கலாம். ஆனால் நீங்கள் அதை மறுத்தால் - அதன் அர்த்தம் என்னவென்றால் - நீங்கள் கடந்த காலத்தின் ஒரு பகுதியாக மட்டுமே பார்க்கப்படுவீர்கள். நீங்கள் வேறுபட்டவர் அல்ல என்பது வெளிப்படும்.

நீங்கள் நம்பகமானவர்களாக இருக்க விரும்பினால் - அதை மறுப்பதையும் அதைச் சமாளிப்பதையும் விட்டுவிடுங்கள். உண்மையாக நீங்கள் செயற்பட்டால் - எங்கள் ஒத்துழைப்பு உங்களுக்கு இருக்கும். ஏனென்றால் இதனால் பாதிக்கப்படுவது எங்கள் மக்கள்தான். எனவே நீங்கள் அந்த பாதையில் சென்றால் எங்கள் முழு ஒத்துழைப்பும் உங்களுக்குக் கிடைக்கும். ஆனால் நீங்கள் இன்று காலை சொன்னதைப் போன்று நீங்கள் செய்ததை வெறுமனே மறுக்க முயற்சித்தால் - பாதுகாப்பு அமைச்சு - பொது பாதுகாப்பு அமைச்சு மற்றும் காவல்துறை மீது மக்கள் ஏற்கனவே வைத்திருக்கும் சந்தேகத்தை நீங்கள் மேலும் வலுப்படுத்துவீர்கள்.

இப்போது ஒரு எளிய தர்க்கரீதியான பிரச்சினை உள்ளது. கௌரவ துணை பாதுகாப்பு அமைச்சரே - இராணுவத்தில் உறுப்பினராக இருந்து ஓய்வு பெற்ற மற்றொரு ஜேவிபி உறுப்பினரும் உள்ளார் என்று நினைக்கிறேன். இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை வடக்கு கிழக்கில் எவ்வளவு சிறந்த சேவையைச் செய்கிறது என்பதுபற்றி உங்களுக்குத் தெரியும் என்று சொன்னீர்கள். வடக்கு கிழக்கில் இராணுவ அமைப்பின் இருப்பு விகிதத்தை யாழ்ப்பாணத்தில் 14 குடிமகனுக்கு 1 இராணுவம் என்றும் வன்னியில் 2 குடிமகனுக்கு 1 இராணுவம் என்றும் குறிப்பிட்டதால் இந்தக் கருத்து உங்களால் தெரிவிக்கப்பட்டது என்று நான் நினைக்கிறேன். எனவே இவ்வளவு பெரிய இருப்புடன் இராணுவம் - கடற்படை மற்றும் விமானப்படை சிறந்த சேவையைச் செய்கின்றன என்பதை நியாயப்படுத்த முயல்கிறீர்கள்.

இப்போது போதைப்பொருள் பற்றிப் பேசலாம். போதைப்பொருள் பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

வடக்கு கிழக்கு கடற்கரையில் எல்லா இடங்களிலும் கடற்படை உள்ளது. ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் உங்களுக்கு ஒரு கடற்படை சோதனைச் சாவடிகள் உள்ளன. நான் உங்களுக்கு சவால் விடுகிறேன். வடக்கு கிழக்கு கடற்கரையின் ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் - அல்லது அதிகபட்சம் 2 கி.மீற்றருக்கு ஒரு கடற்படை சோதனைச் சாவடி அல்லது ஏதேனும் ஒரு முகாம் அங்கு இருக்கும். அவர்கள் அனைவரும் தனியார் நிலத்தையே ஆக்கிரமித்துள்ளனர். சட்டவிரோதமாக தனியார் நிலத்தை ஆக்கிரமித்து அங்கே இருக்கிறார்கள். போரின் போது கூட அவர்கள் இவ்வாறு இருந்ததில்லை. ஏனென்றால் விடுதலைப் புலிகள் அதிகமான பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். போருக்குப் பிறகுதான் கடற்படை, இராணுவம் மற்றும் விமானப்படை இவ்வளவு பெரிய அளவில் உருவெடுத்தனர். அதேவேளை போருக்குப் பிறகுதான் வடக்கு கிழக்கில் போதைப்பொருள் இவ்வளவு அச்சுறுத்தலாவும் உள்ளது. இதை எப்படி விளக்குவீர்கள்? அதை எப்படி விளக்குகிறீர்கள்?

உண்மையில் போர் காலத்தில் விடுதலைப்புலிகள் இருந்தபோதுஇ வடக்கு கிழக்கில் போதைப்பொருள் பிரச்சினை இருக்கவில்லை. அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கூட இருக்கவில்லை. ஏனென்றால் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் விடுதலைப்புலிகள் செயற்பட்டிருந்தனர். அதனால் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அஞ்சினார்கள். அன்றைய அரசாங்கங்கள் கூட கிளர்ச்சி எதிர்ப்பு உத்தியாக போதைப்பொருட்களைப் பரப்புவதற்கு முயற்சி எடுத்திருந்த போதிலும்- அதனை பரப்புவதற்கு அரசாங்கத்தால் முடிந்திருக்கவில்லை. போருக்குப் பிறகு, இன்று 16 ஆண்டுகளுக்குப் பிறகு வடக்கு கிழக்கில் போதைப்பொருள் பிரச்சினை கற்பனை செய்ய முடியாத உச்சத்தை எட்டியுள்ளது என்றால் எப்படி?

கௌரவ அமைச்சரே! இதை நீங்கள் மறுக்க முயற்சித்தால் - எங்களிடம் ஏற்கனவே உள்ள சந்தேகத்தை நீங்கள் மேலும் வலுப்படுத்துகிறீர்கள் என்றே அர்த்தமாகும். எனவே இதுதான் உண்மை. நீங்கள் அதை மறுக்க முடியாது. நான் 14 க்கு 1 - 2க்கு 1 என்னும் இராணுவ பிரசன்னம் பற்றிப் பேசுவதென்பது உத்தியோக பூர்வமான புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயாகும். உங்களிடம் பாரிய உளவுத்துறை கட்டமைப்பு உள்ளது. எனவே இந்த போதைப்பொருள் விடயத்தில் இராணுவத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பதை மறுப்பது ஒரு முழுமையான பொய்யாகும். அது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாது. அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவும் முடியாது. நீங்கள் விரும்பினால் அதை மறுக்கலாம்.

மேலும் - பொறுப்புக்கூறல் தொடர்பான மற்றொரு பிரச்சினை உள்ளது. இலங்கை என்பது சிங்கள பௌத்தர்களை மட்டும் குறிக்காது என்பதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் - தற்போது இலங்கை இருப்பதுபோன்று சிங்களவர்களுக்கும் அவர்களின் நோக்கங்களுக்கும் மட்டுமானது என்ற நிலைமை மாற்றப்படவேண்டும். அப்படியானால் - போரின் போது பாரிய குற்றங்கள் நடந்தன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்தவரைஇ அது இனப்படுகொலை. அது இனப்படுகொலை. நான் அந்தக் குற்றச்சாட்டையே முன்வைக்கிறேன். அது இனப்படுகொலை. இப்போது - நீங்கள் அவை குறித்து என்ன செய்யப் போகிறீர்கள்? அவை குறித்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உண்மை என்னவென்றால், உங்களுடைய மிகப்பெரிய பங்குபற்றுதலுடன் இந்தக் குற்றங்கள் நடந்திருப்பது பற்றி பேசுவது நான் மட்டுமல்ல. முழு உலகமும் அதைப் பற்றிப் பேசுகிறது.

முப்படைகளைச் சேர்ந்த ஒட்டுமொத்த இராணுவத்தினர் மீதும் அந்தக் குற்றங்களில் சந்தேகிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அவர்களில் குற்றமிழைக்காதவர்களின் பெயர்களை நீக்க விரும்பவில்லையா? குற்றமிழைக்காதவர்கள் தங்கள் பெயர்களை நீக்குவது அவர்களின் சொந்த நலனுக்கும் இந்த நாட்டின் நலனுக்கும் உரியதல்லவா? நீங்கள் அதை எப்படி நீக்கப் போகிறீர்கள்?

இராணுத்தினருள் அனைவரும் அப்படிப்பட்டவர்கள் அல்ல என்பதும் எனக்குத் தெரியும். ஏனென்றால் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் பற்றிய அனைத்து ஆதாரங்களும் இராணுவம் மூலமாகவே வெளிவந்தன. ஏனென்றால் இராணுவம் நடந்துகொண்ட விதத்தைத் தாங்க முடியாத மனசாட்சி உள்ளவர்களும் அங்கு இருந்திருக்கிறார்கள். அவர்கள் தான் பதிவுகளை எடுத்து அதைக் கசியவிட்டார்கள். அப்படித்தான் ஆதாரங்கள் வெளிவந்தன.

ஒரு ஒழுக்கமான இராணுவமோ அல்லது ஒரு ஒழுக்கமான நிறுவனமோ இப்படி நடந்து கொள்ளக்கூடாது என்று சிலர் சரியாகச் சிந்தித்துச் செயல்பட்டதால்தான் இன்று இலங்கை இராணுவமும் கடற்படையும் இவ்வளவு கொடூரமான குற்றங்களைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். ஆனால் - சரியாகச் சிந்தித்த நபருக்கும் ஒழுக்கத்தை மீறுபவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அது என்னால் மட்டுமல்ல. முழு உலகத்தாலும் பார்க்க முடியவில்லை.

முந்தைய அவையின் உறுப்பினராக முன்னாள் நாடாளுமன்றத்தில் ஜெனரல் சரத் பொன்சேகா இருந்தபோது. பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் பட்ஜெட் விவாதிக்கப்பட்ட போதெல்லாம் அவர் எழுந்து நின்று - பல சந்தர்ப்பங்களில் 50க்கும் மேற்பட்ட மூத்த அதிகாரிகள் போர் குற்றங்களில் ஈடுபட்டு இருப்பதாகக் கூறுவார். அவர்கள் மீது பயணத் தடைகள் உள்ளன. அவர்கள் ஏதோ ஒரு குற்றப் பட்டியலில் இருப்பதால் அவர்களால் வெளிநாடு செல்ல முடியவில்லை. அவர்கள் மட்டுமல்ல அவர்களது குடும்பங்களும் பட்டியலில் உள்ளனர். எனவே நீங்கள் உங்கள் பெயர்களை அத்தகைய குற்றச்சாட்டுக்களில் இருந்து அழிக்க விரும்பவில்லையா? நீங்கள் கையாள விரும்பும் மரபு இதுதானா? அது செய்யப்பட வேண்டுமானால் - உண்மையான சர்வதேச விசாரணையை எதிர்ப்பதை இராணுவம் நிறுத்த வேண்டும். ஏனெனில் அதுதான் ஒரே வழி. அதுதான் ஒரே உண்மையான வழி. அப்போதுதான் கடந்த காலப் போர்களின் சாபம் நீங்கும். யார் என்ன செய்தார்கள் என்பது மக்களுக்குத் தெரியும். மோசமான செயல்களைச் செய்தவர்களே குற்றவாளிகளாக கண்டறியப்பட்டு தண்டிக்கப்படுகிறார்கள்.

நீங்கள் விடுதலைப்புலிகளை அழித்துவிட்டீர்கள். எந்த விசாரணையும் இல்லாமல் நீங்கள் அவர்களை கொன்றீர்கள். நீங்கள் ஏற்கனவே உங்கள் தீர்ப்பை வழங்கியுள்ளீர்கள். நீதிமன்றத்தின் முன் கொண்டு செல்லாமல் அவர்கள் அனைவரும் இறக்க வேண்டும் என்று நீங்கள் முடிவு செய்து அவர்களைக் கொன்றீர்கள். அதுதான் நடந்தது. ஆனால் அவர்களைக் கொல்வதாகக் கூறி அப்பாவி மக்களையும் நீங்கள் கொன்றீர்கள். அதனால்தான் இது ஒரு இனப்படுகொலை. அதனால்தான் இது ஒரு இனப்படுகொலை.

எனவே இப்போது நீங்கள் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவர்கள். வேறு எவரும் இல்லை. இலங்கை அரசும் அதன் இராணுவ அமைப்பும் மட்டுமே இன்று குற்றம் சாட்டப்பட்ட ஒரே அமைப்பு. அது இதுவரை விசாரிக்கப்படவில்லை. நீங்களே உங்களை விசாரிக்க முடியாது. சர்வதேச விசாரணைக்கு உடன்படுங்கள்.

கௌரவத் தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே!

மற்றறைய அரசாங்களிலிருந்து நீங்கள் வேறுபட்டவர்கள் அல்ல என்பதை ஒப்புக் கொள்ளாத வரை - நீங்கள் முந்தைய அரசாங்கங்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. கடந்த ஆட்சியாளர்கள் இந்தக் குற்றங்கள் அனைத்திலும் மிகவும் உடந்தையாக உள்ளனர். இவ்விடயத்தை நீதியாக கையாள்வதற்கு ஜே.வி.பி ஏன் கவலைப்படுகிறீர்கள்? நீங்களும் இந்த குற்றச் செயல்களுக்கு உடந்தையாக இருந்ததால் தான். எனவே - இது ஒரு நலமோதல் விடயமாகவும் உள்ளது.


ஏனென்றால் - மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கத்தால் மக்களை ஒரு போருக்குத் திரட்ட முடிந்திருக்கவில்லை. அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம் இனவெறிப் போரைப் பற்றிப் பேசுவது மட்டும் தான். அவர்களின் சொல்லாட்சி இனவெறி. எனவே அவர்கள் வேறு யாரையாவது வைத்து போருக்கு அணிதிரட்டுவதற்கு நம்பகமான வாதத்தை முன்வைக் கக்கூடிய ஒருவரை அவர்கள் விரும்பினர். அப்போது அதைச் செய்தது ஜே.வி.பிதான். ஜே.வி.பியின் முன்னாள் தோழர் விமல் வீரவன்ச, தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க மற்றும் இந்த அவையின் முன்னணி ஆசனங்களில் அமைந்துள்ள ஜே.வி.பி. தோழர்களும் இராணுவத்துக்கு அணிதிரட்டி இராணுவ முகாம்களை சுற்றி வந்தார்கள்.

இதனால் நீங்கள் குற்ற உணர்ச்சியுடன் இருக்கலாம். பொதுமக்களை அணிதிரட்டி குற்றங்களைச் செய்ததற்காக நீங்கள் குற்ற உணர்ச்சியுடன் இருக்கலாம். இறுதியில் பாதுகாப்பு அமைச்சும் குற்றங்களைச் செய்திருக்கலாம். ஆனால் உங்கள் சொந்தப் பெயர்களை நீங்களே அழிக்க விரும்பினால், அந்த மாற்றம் உங்களிடமிருந்து தொடங்க வேண்டும். அந்த மாற்றம் உங்களிடமிருந்து தொடங்க வேண்டும். நீங்கள் இலங்கையின் கடந்த காலத்தின் ஒரு பகுதியாக இல்லை என்பதை தமிழ் மக்களுக்கு உண்மையிலேயே நம்ப வைக்க விரும்பினால் - நீங்கள் அந்தக் கால ஜேவிபி இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும். இது ஒரு போர் காலம் அல்ல என்பதால் நீங்கள் அந்தக் கால ஜேவிபி அல்ல என்பதைக் காட்டுவதற்கு அணுகுமுறைகள் வேறுபட்டவையாக இருக்கலாம். அணுகுமுறை மாற்றத்துக்காக நாங்கள் உங்களை மன்னிக்க போவதில்லை.

நான் எழுப்பிய பிரச்சினைகளை நீங்கள் சரியாக கையாள வேண்டும் என்று உங்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக நாங்கள் தெரிவிக்கும் கருத்துக்களை உங்கள் மீது தவறு கண்டுபிடிப்பதற்காக மட்டுமே என்று எடுத்துக்கொள்ளாதீர்கள். ஏனென்றால் நீங்கள் அதைக் கையாளவில்லை என்றால். இந்த இரண்டு அமைச்சுக்களும் இலங்கை அரசின் சட்டபூர்வமான தன்மையைக் கேள்விக்குள்ளாக்க தொடர்ந்து எங்களை தூண்டும் மிக முக்கியமானவை என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.


CTAA CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
yugam radio yugam TV
மதங்க சூளாமணி
கணபதி ரவீந்திரன்
நவரசத் தாரகை
ரூபி யோகதாசன்
கலைச் செம்மல் தமிழ் திரு. க-மதிபாஸ்கரன் அரங்கு
கனடியத் தமிழ் கலைஞர்கள் சங்கம், யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து பெருமையுடன் வழங்கும்
21ஆவது ஆண்டு
நாடகப் பெருவிழா
சிரிக்க, சிந்திக்க, சிந்தனைக்கு விருந்தளிக்க
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள் மற்றும்
பல்சுவை நிகழ்ச்சிகள் உங்களை மகிழ்விக்கும்
TICKET $20
SATURDAY DEC 06 @4:30PM
ARMENIAN YOUTH CENTRE
50 HALLCROWN PLACE (VICTORIA PARK & 401) TORONTO, ON, M2J 1P6
LOCATION QR
TORONTO GAANA BAND
SATHEES (416) 846-1718
SENTHURAN (416) 993-6386
இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்
RAVI : 416 898 7284 RUBY : 416 670 6522
TITLE SPONSOR
Vijaya Jewellery
MEDIA SPONSOR
416-752-1524
BEHIND ME
GTA தமிழ்
647-278-5881
416-678-5866
TORONTO TAMIL
416-429-2822
416-561-3302
416.824.1212
438-771-8463
CTR
Tamil Mirror
Krishna
Easy 24 News
416.414.5562
நாடகக் கலையை வாழவைக்கும் அனுசரணையாளர்கள்
MAIN SPONSOR
SPECTRONX TECHNOLOGIES
குடும்ப நல மருத்துவ நிலையம்
டாக்டர் ஜனகன் சோமசுந்தரம் and Associates
Now Opened at CEDARBRAE MALL
CEDARCARE MEDICAL CENTRE
Tel: 416-289-9786
IT'S TIME FOR OUR OWN TAMIL COMMUNITY CENTRE!
SANTHA PANCHALINGAM
Entrepreneur | Philanthropist | Investor | Community Builder
416.200.5470 | info@santha.ca
AJAX CREMATORIUM
BRAMPTON CREMATORIUM
MELWYN STANISLAUS DHARMA
LICENSED FUNERAL DIRECTOR 647-713-6049
HI FI BARBERSHOP
PAWNBANK INC.
Your Satisfaction is Our Success
EASY CASH FOR GOLD
INTEREST
416-754-7198
info@sugshe.com
www.pawnbank.ca
(FINCH & MCCOWAN)
1571, Sandhurst Circle #159D, Scarborough - M1V1V2,
SPONSOR
VIBRANT HOSPITALITY GROUP
GreatLIFE FINANCIAL
Jay Nadarajah CLU, CHS
MORTGAGE FINANCIAL
NESAN
CityCan
R.R.Rajkumar
647-289-6164
Dr. Sabesan Thangathurai
AMMA PAWN BROKER
CASH FOR GOLD
DEVADAS LAW
Jeni & Paul
Celebrate! Sun Life
Easan Krishna-Pillai
N.K.S
DRAPERY & BLINDS FABRIC
KETHA: 416.321.6420
THE SECURITY FORCE
Cell Tel Mobility
VASHA ORGANIC PRODUCTS
RKS PRINTERS
PRINTING PARTNER


உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?
Legalize your basement now!
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets
Coverall Group Inc.
Contact: Siva
416-706-8160 OR 416-893-3216


Radha Since 1972
RADHA AUTO
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேடத்திறன்
RADHA
416.412.3838
We sold Austin Cambridge & Morris Oxford in Sri Lanka
We are selling Lexus, Mini Vans, Honda & Toyota in Canada
மிகத் தரமான கார்களை, குறைந்த விலையில், நாணயமான சேவையுடன் வாங்கிட ஒருமுறை அழையுங்கள்...
2250 Markham Road
Scarborough ON M1B 2W4
(Markham & Finch)


TK DESIGN STUDIO
Architecture | Interior | Graphics
Our Services
• Architectural Design & Solutions
• Interior Design & Material Selection
• Graphic Designing (Posters, Invitations, Video Ads)
• 2D Planning & 3D Visualization
• Resume & Logo Design
Contact: Tel: +1(942) 380-1165
Email: tkdesignstudio03@gmail.com
Instagram: @tkdesignstudio1


POWERED BY
Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
RemitB
Remitbee Online Money Transfer Service
Best exchange rates in Canada
100% online and available on all platforms
Secure, fast and convenient
100,000+ Canadian customers
100+ partners around the globe
Sending to 80+ countries in 50+ different currencies
$5 billion transferred as of 2021
உதயன் பத்திரிகையின் 29வது ஆண்டு விழாவும்
2025 ஆண்டிற்கான பல்சுவைக் கலை விழாவும்
29th Anniversary Celebrations and Uthayan Cultural Festival-2025
Tickets: VIP $50 Regular $15
சிறப்புப் படைப்பாக
"எரிந்த நம் யாழ் நூலகம்"
* பயனுள்ள உரைகள்
* இசை
* நடனம்
* நாடகம் மற்றும்
* கவிதா நிகழ்வு ஆகியன
DEC 13th, 2025
சனிக்கிழமை மாலை 6.00 மணி
ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபம்
1120 Tapscott Rd Unit 3, Scarborough, ON M1X 1E8
இவ்வருட விழாவின் பிரதம விருந்தினர்
கனடா மொன்றியால் "தமிழாழி"
கலை இலக்கிய அமைப்பின் நிறுவனர்
"மணிவிழா நாயகன்" "பாட்டருவி"
க.உயிரவன் அவர்கள்
K T GROUP
PRESIDENT & CEO MR. KANA SELVA 647302 1189
VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
கனகாம்பிகை
தங்க நகை கடன்
தொடர்புக்கு 416-754-7198
Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
Ph: 647-996-5922 | 905-201-6000
www.latikagoldhouse.ca
AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு மையம்
CASH FOR GOLD
416-757-0034
416-994-3861
வீடு வாங்க விற்க
Excel Realty Ltd., Brokerage
Raj Nadarajah
Sales Representative
Dir: 416.333.6115
Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX
நியூ ரங்கனாஸ்
New Ranganas Jewellers
STANDARD MORTGAGES INC.
Raj Subrayam
CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7
Fashion WORLD INC
Exclusive Clothing Collection
7393 Markham rd, Unit 82, Markham, On. L3S 0B5
905 471 2223
www.thefashionworld.com
ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
N.K.S DRAPERY & BLINDS FABRIC
More than 25 years Experience
KETHA 416.321.6420
Sri Vallipuranathar
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal - Corporation - New Home HST Filling
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
Chapel Ridge
COMPUTEK COLLEGE
Muraly Srinarayanathas
Chief Straegy Officer
2425 Eglinton Ave East Suite 400 Toronto, ON M1K 5G8
Tel: 416-321-9911 ext. 320
Fax: 416-775-9323
Markham Campus 7 Eastvale Dr, Suite 202 Markham, ON L3S 4N8
Tel: 905-471-3344
murały@computek.edu / www.computek.edu
OATC
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services For Personal & Small Business
Corporate Tax & Income Tax Returns
MiracleHealth
MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE
வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
Broker
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd Unit 3
Toronto, ON, MIP 2L5
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Rajeev Koneswaran
Owner & Broker
416 568 1078
1265 Morningside Ave #203, Scarborough, ON M1B 3V9
SANTHA
PLUMBING & DRAINAGE SERVICES
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha
Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519
For Tickets and information: 416-732-1608 or 416-752-1524

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1547 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 28, 2025



# நவம்பர் பதின்மூன்றும் நவம்பர் இருபத்தியேழும்

## -யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

இம்மாதம் 13ஆம் தேதி ஜேவிபி அதனுடைய தியாகிகள் தினத்தை அனுஷ்டித்தது. கொழும்பு விகாரமகாதேவி பூங்காவின் வெளியரங்கில் இந்த நிகழ்வு நடந்தது.
விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மாவீரர் நாளும் ஜேவிபியின் கார்த்திகைத் தியாகிகள் நாளும் ஒரே மாதத்தில் வருவது ஒரு நூதனமான ஒற்றுமை. விடுதலைப் புலிகள் இயக்கத்துடைய முதலாவது மாவீரர் தன் உயிரை தியாகம் செய்த நாள் மாவீரர் நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது.
ஜேவிபி தலைவர் ரோகன விஜயவீர அரச படைகளால் கைது செய்யப்பட்டு, குரூரமாகக் கொல்லப்பட்ட நாள் அந்த அமைப்பின் தியாகிகள் நாளாகக் கொண்டாடப்படுகிறது. (தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ராஜேந்திர சோழனின் 1000வது ஆண்டுக் விழா கம்போடியாவில் நடைபெற்ற பொழுது கனடிய மத்திய அரசு — ஒன்றாரியோ மாகாண அரசு ஆகியவற்றின் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பெற்றன

அங்கோர் தமிழ்ச் சங்கம் மற்றும் சீனு ஞானம் ட்ராவல்ஸ் நிறுவனம் மற்றும் சவுத் ஈஸ்ட் ஆசியா பல்கலைக் கழகம் ஆகிவற்றின் இணைந்த ஏற்பாட்டிலும் சிந்தனையிலும் திட்டமிடப்பெற்ற "கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் பெருவீரனின் 1000வது வெற்றிக் கொண்டாட்டம் கம்போடியா தேசத்தின் அங்கோர்வாட் நகரில் நவம்பர் 22ம் 23ம்திகதிகளில் சிறப்பாகவும் உணர்வுடனும் நடைபெற்றது.
இந்த மாநாட்டை இங்கு சிறப்பாக நடத்துவதற்கு அங்கோர் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய தங்கவேலு சிறினிவாச ராவ்-ராஜசேகரன் ஞானசேகர் மற்றும தாமரை சிறினிவாச ராவ் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தார்கள். அவர்களோடு மாணிக்கம் சதாசிவம் மற்றும் முருகேசன் ஞானமூர்த்தி ஆகிய இருவரும் இணைப்பாளர்களாக இருந்து பணியாற்றினார்கள். அவர்களுக்கு கனடிய மத்திய அரசு சார்பில் கௌரவ மத்திய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி மற்றும் ஒன்றாரியோ மாகாண அரசு சார்பில் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் ஆகியோர் சார்பில் பாராட்டுப் பத்திரங்களை உதயன் பிரதம ஆசிரியரும் அவரது பாரியாரும் இணைந்து வழங்குவதைக் காணலாம். மேடையில் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களும் காணப்பெறுகின்றார்கள்.




# ராஜேந்திர சோழனின் 1000வது ஆண்டுக் கொண்டாட்டம் கம்போடியா அங்கோர்வாட் நடைபெற்ற பொழுது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் பாராட்டுக் கேடயத்தை வழங்கிய கனடா வாழ் முக்கிய உறுப்பினர்கள்




"கடாரம் கொண்டான்" ராஜேந்திர சோழன் பெருவீரனின் 1000வது வெற்றிக் கொண்டாட்டம் கம்போடியா தேசத்தின் அங்கோர்வாட் நகரில் நவம்பர் 22ம் 23ம்திகதிகளில் சிறப்பாகவும் உணர்வுடனும் நடைபெற்றது.
இந்த மாநாட்டை இங்கு சிறப்பாக நடத்துவதற்கு அங்கோர் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய தங்கவேலு சிறினிவாச ராவ்-ராஜசேகரன் ஞானசேகர் மற்றும தாமரை சிறினிவாச ராவ் ஆகியோர் முக்கிய பங்கு வகித்தார்கள். அவர்களோடு மாணிக்கம் சதாசிவம் மற்றும் முருகேசன் ஞானமூர்த்தி ஆகிய இருவரும் இணைப்பாளர்களாக இருந்துபணியாற்றினார்கள்.
அவர்களுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் பாராட்டுக் கேடயத்தை வழங்கிய கனடா வாழ் முக்கிய உறுப்பினர்களான மோகன் பாலசுப்பிரமணியம் மற்றும் சங்கர் சிவநாதன் ஆகியோர் இணைந்துவழங்குவதைக் காணலாம்.

# வடக்கில் மாவீரர் துயிலும் இல்லங்கள் இம்மாத இறுதிக்குள் விடுவிக்கப்படலாம் என அமைச்சர் சந்திரசேகரன் நம்பிக்கை!

வடக்கில் பாதுகாப்பு தரப்பினரின் கட்டுப்பாட்டுக்குள் காணப்படுகின்ற சில மாவீரர் துயிலும் இல்லங்களை இம்மாத இறுதிக்குள் விடுவிப்பதற்கான சாத்திய கூறுகள் தென்படுவதாக யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)



# தேசிய தலைவர் கொல்லப்பட வேண்டும் என்று விரும்பிய தமிழரசு கட்சி மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்படும்

## ஈழதமிழர் முன்னணி கட்சி தலைவர் எஸ். ஜெயா சரவணா தெரிவிப்பு



தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கி சம்பந்தனை தமிழர்களின் தலைவராக்கி பாராளுமன்றத்துக்கு அனுப்பி அழகு பார்த்த தேசிய தலைவரை கொல்லுமாறு சொன்ன சம்பந்தன் ஒரு நயவஞ்சகர் .எனவே அவரைக் கொல்ல சொன்ன தமிழரசு கட்சி இந்த மண்ணில் இருக்க கூடாது அவ்வாறு இரா.சாணக்கியன் கிழக்கு மண்ணில் இருந்து எம். சுமந்திரன் கட்சியில் இருந்து விரட்டி அடிக்கப்படுவார்கள் இதற்காகவே கட்சி செயல்படும் என ஈழ தமிழர் முன்னணி கட்சி தலைவர் அன்பின் இல்லம் அறக்கட்டளை தலைவருமான எஸ்.ஜெயா சரவணா தெரிவித்தார். (தொடர்ச்சி 16ம் பக்கம்)